# மனுநீதி விளக்கம்

ஆக்கியோன்:

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்கள்

குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு.

1944

விலை அணா 3.

மூன்றாம் பதிப்பு (1000 படிகள்)

Tamilan Press, Erode.

# மனு நீதி விளக்கம்

1. "அந்தப் பிரம்மாவானவர் இந்தப்படி தன் விழித்தலினாலே இந்த தாவர சங்கமத்தை உண்டுபண்ணியும், உறங்குதலினாலே அழித்தும், தான் அழிவில்லாமலே இருக்கிறார்". (மனு அத். 1 சு. 57)

2. "அந்தப் பிரம்மாவானவர் இந்த சாஸ்திரத்தை உண்டு பண்ணி விதிப்படி எனக்கு முன்னம் ஓதுவித்தார். நானும் மரீசி முதலான ரிஷிகளுக்கு ஓதுவித்தேன்". (மனு அத். 1 சு. 58)

3. "இந்த சாஸ்திரத்தை என்னிடத்தினின்று நன்றாக ஓதி யுணர்ந்த இந்தப் பிருகு மஹாரிஷி உங்களுக்கு முழுதுஞ் சொல்லுவார்". (மனு அத். 1 சு. 59)

அன்பர்களே! மனுஸ்மிருதி பிரம்மா பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு பிருகு மஹாரிஷியால் மற்றுள்ள ரிஷிகளுக்கு வர்ணாச்சிரம தர்மமாகிய வைதீக தர்மத்தை விளக்கிக் காட்டும் ஓர் முக்கிய நூலென்று அறிந்துகொள்ளுங்கள்.

4 "பூமியிற் பிறந்திருக்கிற பிராமணன் பெருமை பெற்றவனாய் சகல வருணத்தாருடைய தருமமென்னும் பொக்கிஷத்தை அரசன் போல் காப்பாற்றுகிறான்".
(மனு அத். 1 சு. 99)

5. "பிராமணன் முதல் வருணத்தானானதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததினா

லும், இந்த உலகத்தில் உண்டாயிருக்கிற சகல வருணத்தாருடைய பொருட்களையும் தானே தானம் வாங்க பிரபுவாகிறான்". (மனு அத். 1 சு. 100)

6. "ஆதலால் பிராமணன் ஒருவரிடத்தில் தானம் வாங்கினாலும், தன் பொருளையே சாப்பிடுகிறான். தன் வஸ்திரத்தையே உடுத்துகிறான், தன் சொத்தையே தானம் செய்கிறான். மற்றவர்கள் அவன் தயவினாலேயே அவற்றையனுப்பவிக்கிறார்கள்". (மனு அத். 1 சு. 101)

அன்பர்களே! இஃதுண்மையாயின், சமணம், பௌத்தம் முதலிய மதங்கள் மேற்பட்டு வைதீக ஸ்மார்த்த தாந்ரீக மதத்தை யழிப்பானேன். கிறிஸ்து மதம் மூகம்மது மதம் இந்நாட்டில் விருத்தி பெறுவானேன். நாளுக்கு நாள் ஹிந்து மதம் தொகையில் குறைவானேன். தரித்திரமடைந்து அயல் நாட்டுக்கு ஆடு மாடுகளைப் போல் விற்பனைக்குச் செல்வானேன். பார்ப்பனரும் வாசல் தோறுஞ் சென்று பிச்சையேற்பானேன். 101-வது சுலோகத்திற் கூறியது போல ஆங்கிலேயர் முதலிய அந்நிய நாட்டார்களும் இப்பார்ப்பனர்களுடைய கருணையினால்தானா?, ஜீவித்து வருவது. இப்படித் தன்னை உயர்த்திச் சொல்லிக் கொள்ளும் டம்பாச்சாரியர்களின் மதியீனத்தைப் பாருங்கள்.

7. "பார்ப்பனர் இந்த மனு சாஸ்திரத்தைப் படிக்கலாம். மற்ற வருணத்தாருக்கு ஓதுவிக்கக்கூடாது". (மனு அத். 1 சு. 103)

8. "பழமையான தேச ஒழுக்கத்தையும், குல ஒழுக்கத்தையும் மனுப்பிரஜாபதியானவர் இந்தச் சாஸ்

திரத்தில் வரிசையாகச் சொல்லியிருக்கிறார்''.

(மனு அத். 1 சு. 118)

அன்பர்களே! வேதங்களை ஒத்துக்கொள்ளாத மதமானது—சமணம், பௌத்தம் என இரண்டு. இம் மதங்களின் காலம் 2370 புத்தருக்கும், 2452 சமணருக்கு மாம். இம்மனுஸ்மிருதியாகிய பிருகு, சங்கிதை இவ் விரண்டிற்கும் அனேக வருடங்களுக்குப் பிற்பட்ட நூலென்று தெரியவருகிறது. இதனோடு மனு அத்தி யாயம் 12-ல் 95, 96, 97, 98, 99-ம் சுலோகங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

9. ''மனுப்பிரஜாபதியால் எந்த வருணத்தாருக்கு எந்த தருமம் விதிக்கப்பட்டதோ அது வேத சம்மதமே யாம். அவர் வேதங்களின் கருத்துக்கள் நன்றாக உணர்ந்தவரல்லவா''. (மனு அத். 2 சு. 7)

அன்பர்களே! யஜுர் வேதத்தில் மனிதர்களுக்குள் 196-பிரிவுகள் இருக்கிறது என்பதை அறிந்துகொள் ளுங்கள்.

10. ''வேதத்தைச் சுருதி என்றும், தரும சாஸ் திரத்தை ஸ்மிருதி என்றும் அறியத்தக்கது. அவ்விரண் டையும் தர்க்க யுக்தியைக்கொண்டு மறுப்பவன் நாஸ்திக னாவான்'' (மனு அத். 2 சு. 10)

11. ''அத்தகைய நாஸ்திகனை நல்லோர்கள் புறக் கணிக்கக்கடவர், ஏனெனில் இத்தகைய நாஸ்திகன் வேதத்தை நிந்தித்தால் தெய்வத்தை நிந்தித்தவனாகி றான்.'' (மனு அத். 2 சு. 11)

அன்பர்களே! பஞ்சமா பாதகக் களஞ்சியங்களான மேற்சொன்ன வேதங்களையும், ஸ்மிருதிகளையும் ஜைனர்களும், புத்தர்களும் நியாய வாயிலாகக் கண்டித்து நம்மவர்களுக்கு கல்வி முதலிய பல துறைகளிலும் உதவி புரிந்தார்களே யல்லாது, எவ்வித கேடும் செய்யவில்லை. ஆயினும், கொல்லாமையே விரதமாகக்கொண்ட அவ்வுத்தமர்களை மேற்குறித்த மனுவின் வாக்கியத்தை ஆதாரமாக வைத்துக்கொண்ட பிராமணர்களும் அவர்களின் அடிபணியும் சிலரும் சேர்ந்து நாட்டைவிட்டுத் துரத்தியும் கழுமரத்திலேற்றியும் சித்திரவதை செய்தும் அழித்தனர். ஆனால் பிராமணர்கள் ஜைன புத்தர்களை அழித்ததும் அன்னியில் நாட்டபிவிருத்தியையும் குலைத்தனர், அக்காலத்து சமண புத்தர்கள் தேச நன்மையின் பொருட்டு என்ன உபதேசம் செய்தார்களோ அதே விஷயத்தை ஜனங்கள் இப்போது விரும்பிக் கேட்கிறார்கள்.

## இந்நூலை ஓத அதிகாரி

12. "எவனுக்குக் கருப்பதான முதல் அந்தியேஷ்ட ஸம்ஸாகாரம் வரையில் மந்திர பூர்வமாகக் கருமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தத் துவிஜன் (பிராமணன்) இந்த நூலை ஓத அதிகாரியானவன். மற்ற ஜாதியான் அதிகாரியன்று." (மனு அத். 2 சு. 16)

13. "கிருஷ்ணசாரமென்னும் மானானது எந்தவிடத்தில் சுபாவமாய் சஞ்சரிக்கின்றதோ அந்த இடந்தான் யாகத்திற்குரிய பூமி, மற்ற இடம் அசுத்தமான மிலேச்ச தேசமென்று சொல்லப்படும்."

(மனு அத். 2 சு. 23)

14. "இப்படிப்பட்ட புண்ணிய தேசங்களை துவிஜர்கள் (பிராமணர்கள்) வேறு தேசத்தில் பிறந்தவர் களாயினும் வந்தடையவேண்டியது, அல்லது சூத்திரன் (அடிமை) ஊழியத் தொழிலைத் தவிர வேறு தொழிலைச் செய்யத் தகுதியற்றதேசம் யாதோ அந்த இடமும் வசித்தற்குரியதாம்." (மனு அத். 2 சு. 24)

அன்பர்களே! ஒன்றரைக்கோடிப் பிராமணர்கள் போக மற்றெல்லோரும் இந்து மதப்படி அடிமைகள். இது வேத ஸ்மிருதிகளின் கருத்து. இதை ஆதாரமாக வைத்துக் கொண்டே சைவ சமயாச்சாரிகள் பிராமணர் குலத்தில் பிறந்த மூவரும் சன்மார்க்கம், சகமார்க்கம், புத்திர மார்க்கம் இவைகளை யனுசரிப்போர் என்றும் ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தாஸ மார்க்கத்தினர் என்றும் நூல் எழுதி வைத்திருக்கிறார்கள். பிராமணர் களுடைய மற்றொரு தந்திரத்தையும் இங்கு குறிப்பிடு கிறேன்; சில பிராமணர்கள் பிராமணால்லாத சாதுக்கள் வசிக்கும் மடத்துக்கும் அத்தகைய சாதுக்களின் மீது அன்பு வைத்திருப்போரிடத்திற்கும் சென்று ஹரி ஹரி நாங்கள் பிராமண குலத்தில் பிறந்தவர்களேயானாலும் ஒழுக்கக் குறைவினால் சூத்திரர்களாவோம். சதா சார சம்பன்னர்களாகிய தங்கள் போன்ற புண்ணிய ஆத்மாக் களன்றோ உண்மையிற் பிராமணர். இவ்வார்த்தை முகஸ்துதி யென்றெண்ண வேண்டாம். "ப்ரஹ்மஜ் ஞானிது ப்ராஹ்மண" பிரம்ம ஞானியே பிராமணன் என்று சாஸ்திரம் இருக்கிறது என்று சொல்லி அவர் களுக்குக் களிப்பையூட்டிக் காசைப் பறித்துச் செல்வர். ஆனால் இவ்வார்த்தையானது ஒரு பிராமணால்லாதார்

வாயினின்றும் வந்தால் உடனே பிராமணனுக்கு கோபம் வந்து விடும். ''ப்ரஹ்மஜ் ஞானிது ப்ராஹ்மண (ப்ரஹ்ம வேதம்) வேதம் உணர்ந்தவனே பிராமணன் என்று வேறு பொருள் கூறுவார்கள். பஞ்சமா பாதகக் களஞ்சிய மாகிய வேதமானது ஏனையோருக்கும் படிக்க முடியாதா கையால் சாதிப் பிராமணனுக்கே பிராமணப்பட்டம் உறு திப்பட்டு விட்டது. ஆதலால் பிராமண மாய்கையில் ஏமாந்து போகாதீர்கள்.

15. ''கருப்பாதான மந்திரத்தாலும், சேர்த்த ஓமத் தாலும் சாதகருமம், அன்னப்பிராசனம், சௌளம், உப நயனம் இவைகளினாலும் துவிஜர்களுக்கு (பிராமணர் கள்) சம்போகம் செய்யக்கூடாத தினத்திற்றானுற்பத்தி யான தோஷமும், மாதாவின் கருப்பத்தில் வசித்த தோஷ மும் நீக்கப்படுகின்றன''. (மனு அத். 2 சு. 27)

16. ''பிராமணனுக்கு மங்களத்தையும், க்ஷத்திரி யனுக்குப் பலத்தையும், வைசியனுக்குப் பொருளையும் சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இட வேண்டும். மேற்குறித்த பெயர்களை காட்டுகின்ற பெயர்கள்''. (மனு அத். 2 சு. 31)

17. ''பிராமணனுக்கு ''சர்மா'' என்றும், க்ஷத்திரி யனுக்கு ''வர்மா'' என்றும், வைசியனுக்குப் ''பூதி'' என்றும், சூத்திரனுக்கு ''தாஸன்'' என்றும் தொடர் பெயராக இடவேண்டியது''. (மனு அத். 2 சு. 32)

அன்பர்களே! சூத்திரனுக்குப் பெயரிடும் விஷயத் திற்கூடப் பிராமணர்களுக்குப் பொறாமை இருப்பதைக்

கவனியுங்கள். அன்றியும் சங்கரன், கிருஷ்ணன், பரமேஸ்வரன், நாராயணன் முதலிய பெயர்கள் பிராமணரல்லாதாருக்கிருந்தால் பொறாமைக்காரப் பிராமணர்கள் தங்கள் முழுப் பெயரைச் சொல்லாமல் சங்கு, கிட்டு, பாச்சு, நாணு என்ற பொருளற்ற சொற்களினால் அழைத்து வருவது வழக்கம். மலையாளத்தில் சாரப்பன் ஸ்ரீகண்ட மேனன் என்னும் பெயருள்ள ஒரு தாசில்தார் உத்தியோகத்தில் இருந்தவர். அன்னாரைக்கூடப் பிராமணர்கள் சாப்பன் குண்டன் மேனன் என்று அழைத்து வந்தார்களாம். மனுஸ்மிருதியில் அத்தியாயம் 2-ல் சுலோகம் 41 முதல் 49 வரையில் பார்த்தால் அவைகளில் பூணூல், கையில் வைத்திருக்கும் தண்டம், பிச்சை வாங்கும் போது சொல்லும் சொல், இவைகளில் வேற்றுமை இருக்கிறது. அன்றியும் ஆசமனம், காயத்திரி, ஆசீர்வாதம், வஸ்திரம், உபநயனம் இவைகள் மூன்று வருணத்தாருக்கு மாத்திரமேயன்றிச் சூத்திரர்களுக்கு இல்லை.

18. "பிராமணனுக்கு ஞானத்தினாலும், க்ஷத்திரியனுக்கு வீரிய (சரீரவன்மை)த்தினாலும், வைசியனுக்குப் பொருள் தான்யம் இவைகளினாலும் மேன்மையுண்டாகிறது". (மனு அத். 2 சு. 155)

19. "சூத்திரன் தன் குலத்தில் மட்டும், வைசியன் தன் குலத்திலும் சூத்திர குலத்திலும், க்ஷத்திரியன் தன் குலத்திலும் வைசிய குலத்திலும் சூத்திர குலத்திலும், பிராமணனுக்கு தன் குலத்திலும் மற்ற மூன்று குலத்திலும் விவாகம் செய்துகொள்ளலாம்"

(மனு அத். 3 சு. 13)

அன்பர்களே! இதை நன்றாய் கவனியுங்கள். நமது தமிழ் நாட்டினுங்கூட ஒரு வகுப்பார் சூத்திரர் பெண்களை மணந்துகொள்ளக் கேட்டும் கொடாமையால் அவர்கள் வருணாசிரம தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு யுத்தம் செய்ததில் சூத்திரர் (பிராமணரல்லாதார்) வெற்றி பெற்று அவர்களை பங்கப்படுத்தி அவர்கள் குலத்தில் இருந்த பெண்களனைவரையும் தீக்கிரையாக்கி விட்டனர். மற்றொரு காலத்தில் சில காரணங்களுக்காக தமதுபெண்களை அவர்களுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்து தம்மோடு சேர்த்துக்கொண்டனர். இன்றைக்கும் அந்தப் பெண்கள் கலியாண காலங்களில் வெள்ளாட்டி மொய்ப் பணம் என்று எழுதி வருகிறார்கள். வேறும் இதற்குத் தகுந்த ஆதாரங்களிருக்கின்றன.

20. "படுக்கையில் சூத்திர கன்னிகையோடு சமமாய்ப் படுத்திருக்கிற பிராமணன் நரகத்தை யடைகிறான். பிள்ளையை உண்டுபண்ணுகிறவன் பிராமணத் தன்மையினின்றும் நீங்கி விடுகிறான்".

(மனு அத். 3 சு. 17)

அன்பர்களே! இந்தச் சுலோகம் முற்கூறப்பட்ட 13-வது சுலோகத்திற்கு முரண்பட்டிருந்தாலும் இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பார்த்தால் மலையாளத்தில் பிராமணன் ஒருவன்கூட இருக்கமாட்டான்.

21. "பிராமணரின் பிதிர்க்களுக்குச் சோம்பர் என்றும், க்ஷத்திரியரின் பிதிர்க்களுக்கு ஹவிர்புக்குகள் என்றும், வைசியரின் பிதிர்க்களுக்கு ஆஜ்யபர் என்றும் சூத்திரரின் பிதிர்க்களுக்கு சுகாலிகள் (வசிட்ட புத்திரர்

கள்—விஸ்வாமித்திரர் சாபத்தால் நரகமடைந்தோர்) என்றும் பெயர்''. இதனோடு மனு அத். 12 சு. 71-ல் பார்க்கவும். (மனு அத். 3 சு. 197)

22. ''பிரம்மசாரி, மனைவியில்லாத கிரஹஸ்தன் சிரார்தஞ் செய்தல் வரிக்கப்பட்ட பிராமணன் கையில் அன்னத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். பார்ப்பனர் அக்கினிச் சொரூபரென்று வேதம் தெரிந்த பெரியோர்களால் சொல்லப்படுகின்றனர்''. (மனு அத். 3 சு. 212)

அன்பர்களே! அக்கினியைப்போல அடுத்தவர்களைச் சுடுங்குணமுள்ளவர்கள் பார்ப்பனர்கள் என்பது அவர்களது கொடுஞ் செய்கைகளால் நமக்கு அனுபவமன்றோ.

23. ''வடை முதலிய பலகாரங்கள், பாயாசம், கிழங்குகள், உருசியுள்ள இறைச்சி, நறுமணமுள்ள நீர் இவைகள் பிராமணர்களுக்குரியன'',

(மனு அத். 3 சு. 227)

அன்பர்களே! பார்ப்பனர்கள் மாமிசம் உண்பதை இதை யுணர்ந்த யாரும் பார்ப்பனர்களை மாம்சம் புசிப்பதில் தடை சொல்லமாட்டார்கள்.

24. ''பன்றி முகருவதினாலும், கோழியின் சிறகு காற்றுப்படுவதனாலும், நாய் பார்த்தலினாலும், சூத்திரன் தொடுவதனாலும் பதார்த்தம் (உணவுப் பொருள்) அசுத்தமாகிறது''. (மனு அத். 3 சு. 251)

அன்பர்களே! சூத்திரனை இவ்வாறாவது ஒப்பிட்டுச் சொன்னார்களே மிகச் சந்தோஷம்.

25. "நொண்டி, ஒற்றைக்கண்ணன், சிரார்த்தஞ் செய்பவரின் வேலைக்காரனாகிய சூத்திரன், நான்கு விரல் ஆறு விரல் உள்ளவன், இவர்களைச் சிரார்த்தத்தன்று வீட்டை விட்டு வெளிப்படுத்த வேண்டும்".

(மனு அத். 3 சு 242)

அன்பர்களே! வடநாட்டில் சன்னியாசியையும் இப்படியே பார்ப்பனன் சிரார்த்தத்துக்குச் சேர்க்கிறதில்லை.

26. "செந்நெல்லின் சோறு, பசுவின் பால், சோமலதையின் சாறு (சோமலதை—ஆட்டாங்கொடி) தீ நாற்றமில்லாத இறைச்சி, கல்லுப்பு இவைகள் இயற்கையாகவே அவிசு (ஹோமத்திற்குரியவை) களென்று சொல்லப்படுகின்றன". (மனு அத். 3 சு. 257)

அன்பர்களே! இந்த வாக்கியத்தை இடையிலே சேர்த்துக் கொண்டார்கள். முன்னர் அப்படி இல்லை என்று ஆரிய சமாஜத் தலைவர் தயானந்த சரஸ்வதி கூறுகிறார். இவ்வேமாற்றத்தைப் பாருங்கள்.

27. "எள்ளு, செந்நெல்லரிசி, உளுந்து, ஜலம், கிழங்கு, பழம் இவைகளினால் சிரார்த்தஞ் செய்தால் ஒரு மாதம் வரையில் பிதிர்க்கள் திருப்தியடைவார்கள்".

(மனு அத். 3 சு. 267)

28. "ஆமை, மச்சம் (மீன்) இவைகளின் இறைச்சியால் சிரார்த்தஞ் செய்தால் இரண்டு மாதம் வரையி

லும், அரிணமென்னும் மானின் இறைச்சியால் செய்தால் மூன்று மாதங்கள் வரையிலும், செம்மறி ஆட்டின் இறைச்சியால் செய்தால் நான்கு மாதங்கள் வரையிலும், பறவைகளின் இறைச்சியால் ஐந்து மாதங்கள் வரையிலும் திருப்தியடைகிறார்கள்". (மனு அத். 3 சு. 258)

அன்பர்களே! இப்படி மாம்சம் கொடுக்காததால் பார்ப்பனப் பிரேதங்கள் நரகத்தில் கஷ்டப்படுகிறார்கள். அதனால் தென்னாட்டில் மழையில்லை. பார்ப்பனர்களை இவ்வாறு சிரார்த்தம் பண்ணச் சொல்லுங்கள்.

29. "வெள்ளாட்டின் இறைச்சியால் ஆறு மாதங்களும், புள்ளி மான் மாமிசத்தால் ஏழு மாதங்களும், கரும்புமான் (கிருஷ்ணா மிருகம் அல்லது கவரிமான்) மாமிசத்தால் எட்டு மாதங்களும், கலைமான் மாமிசத்தால் ஒன்பது மாதங்களும் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத். 3 சு. 269)

அன்பர்களே! இப்படியே செய்யுங்கள். தங்களுடைய பெற்றோர்களின் சிரார்த்தம் இல்லாவிடில் அத்தியாயம் 12 மனு பாட்டு 71 பாருங்கள்.

30. "முள்ளம் பன்றி, காட்டெருமைக்கடா, இவைகளின் மாமிசத்தால் பத்து மாதங்கள் வரையிலும், முயல், ஆமை இவைகளின் மாமிசத்தால் பதினோரு மாதங்கள் வரையிலும் திருப்தியடைகிறார்கள்".

(மனு அத். 3 சு. 270)

31. "பசுவின் பால், தயிர், நெய், இவைகளால் சிரார்த்தஞ் செய்தால் ஒரு வருடம் வரை யிலும் தண்ணீர் குடிக்கும் போது இரு காதுகளும் தண்ணீர் படக் குடிக்கின்ற "வார்த்தீசன்" என்னும் கிழ வெள்ளாட்டின் மாமிசத்தால் பன்னிரண்டு வருடங்கள் வரையிலும் பிதிர்க்கள் திருப்தியடைகிறார்கள். அவ்வக் காலங்களில் உண்டான கறியமுது முள்ளுள்ள வாளை மீன், கட்க மிருகம் சிவந்த ஆடு (செம்மறி ஆடு) இவை களின் மாமிசங்களாலும், காட்டில் முளைத்திருக்கும் செந்நெல்லின் அரிசியினாலும் சிரார்த்தஞ் செய்தால் அள வற்ற காலம் பிதிர்க்கள் திருப்தி யடைகிறார்கள்".

(மனு அத். 3 சு. 271)

அன்பர்களே! ஸ்மிருதிகள் உயிர்க் கொலை செய்ய இடந்தரவில்லை யென்பது எத்தன்மைத்து? வேதங் களில் இன்னுங் கடுமையான யாகாதி கர்மங்களின் போதும் ஆகமங்களில் "காமிகம் வாஸ்துதேவ பலி பட லம்" முதலிய பல இடங்களிலும் உயிர்க் கொலைகள் மலிந்து கிடக்கின்றன. இங்ஙனமிருக்க உயிர்கொலையை நீக்கிய சமண பௌத்தர்களைக் காட்டிலும் பார்ப்பனச் சமயம் சிறப்புடைத்து எனப்பிரசாரஞ் செய்ய சாதுக்கள் ஒப்புவரோ? சாதுக்கள் சமயம் சாம்மிய வாதம் தற் போது சாம்மிய வாதம் என்ற பெயர் கெட்டு சமண மதம், புத்த மதம் என்ற பெயரோடு விளங்குகிறது.

32. "ருதம், அமிர்தம், மிர்தம், ப்ரமிர்தம், சத்தி யான்ம்ருதம் இவ்வைந்து தொழில்களாலும் பொருளைச் சம்பாதிக்கலாம். சுனக விருத்தியினால் ஆபத்தில்லாத போது ஜீவிக்கலாகாது". (மனு அத். 4 சு. 45)

அன்பர்களே! சுனகன்—நாய். விருத்தி—தொழில். நாயின் தொழிலைப்போன்ற தொழிலென்று பொருள். இங்கு அடிமைத் தொழிலைத்தான் குறிப்பிடுகிறார்கள்.

33. "வயலிலும் மற்றவிடத்திலும் சிந்தின நெற்களை இரண்டு விரற்களால் பொறுக்குவதும், மேற்சொன்ன விடங்களில் கதிர் நெல்லைப் பொறுக்குவதும் "ருதம்" என்பதாம். தான் கேட்காமல் வருவது அமிர்தமாம். கேட்டபின் கிடைப்பது மிருதமாம், பயிரிடுவது ப்ரமிருதமாம்". (மனு அத். 4 சு. 46)

34. "சூத்திரன் இராஜாவாயிருக்கும் இராஜியத்திலும், தரும மறியாதவர்கள் பாஷண்டிகள், இவர்கள் வசிக்குங் கிராமத்திலும், சமீபத்தில் சண்டாளர்வசிக்குங் கிராமத்திலும் வாசஞ் செய்யலாகாது".

(மனு அத். 4 சு. 61)

அன்பர்களே! எவ்விதத்திலும் சூத்திரர் முன்னேற்றமடையக் கூடாதென்பதே பார்ப்பனரின் கருத்து. ஆனால் இப்போது இந்தூர், குவாலியர், பாட்டியாலா, பரோடா, கோல்ஹாபூர், திருவாங்கூர், மைசூர் முதலிய சமஸ்தானங்களில் பார்ப்பனரல்லாதார் அரசர்களாயிருப்பது மகமதியர்களின் கிருபையினால் என்று அறிந்து கொள்ளுங்கள். இத்தகைய அரசர்கள் பலர் பார்ப்பனரல்லாதாருக்குள் இருந்தும் நம்மவர்களுக்கு ஒரு நன்மையுஞ் செய்ய முடியாமலிருப்பது பார்ப்பனரையும் அவர்களின் சமய போதனையையும் வழிபடுவதினாலேயாம்.

35. "இம்மைக்குப் பயனளிக்கின்ற அர்த்த சாஸ்திரத்தைச் சொல்லிவைக்காது. தன் சிஷ்யனாகாத சூத்திரனுக்கு உச்சிட்ட அன்னத்தையும் கொடுக்கலாகாது. ஓமம் பண்ணிய சேஷத்தையும் சூத்திரனுக்குக் கொடுக்கலாகாது. தருமம், விரதம் இவைகளையும் நேராய் அவனுக்குச் சொல்லலாகாது". (மனு அத். 4 சு. 80)

36. எந்தப் பிராமணன் சூத்திரனுக்கு நேராகத் தருமத்தையும், விரதத்தையும் உபதேசிக்கிறானோ அவன் அந்தச் சூத்திரனோடு கூட "அஸம்வ்ருத (ஓர் வித நரகம்) மென்னும் இருளில் மூழ்கிறான்".

(மனு அத். 4 சு. 81)

அன்பர்களே! இரண்டு கண்களுமில்லாதவனுக்குச் "செந்தாமரைக் கண்ணன்" எனப் பெயரிடப்பட்டது போன்றும். ஒன்றுமீயாத லோபிக்குக் 'கர்ணன்' எனப் பேரிட்டாற்போலும் இருக்கின்றதன்றோ, இவ்வதருமக் களஞ்சியத்திற்கு தரும நூலெனப் பெயர் சூட்டியிருப்பது. இச்சட்டத்தின் கொடுமைதான் இன்னும் நம் நாட்டில் நன்றாக எழுதப்படிக்கத் தெரியாமல் பதினேழு கோடி ஜனங்களைப் பசுக்களைவிடத் தாழ்ந்த நிலையில் வைத்திருப்பது.

37. "க்ஷத்திரிய வம்சத்திற் பிறவாத அரசன், கசாய்க்காரன், திலமர்த்தனஞ் செய்பவன் (எள்ளாட்டுபவன்) கள் விற்பவன், வேசைத்தொழில் செய்பவன் இவர்களிடத்தில் தானம் வாங்கலாகாது".

(மனு அத். 4 சு. 84)

38. "திலமர்த்தனஞ் செய்பவன் பத்துக் கசாயிக் காரர்களுக் கொப்பானவன், அவனைக்காட்டிலும் பத்துப்பங்கதிகம் கள்ளு விற்பவன். அவனைவிட வேசைத் தொழில் செய்பவன் பத்துப்பங்கதிகமாவான். அவனிற் பத்துப் பங்கதிகம் அரசன்". (மனு அத். 4 சு. 85)

39. "அரசன் பதினாயிரங் கசாய்க்காரர்களுக்குச் சரியானவனாதலால் அவனிடத்தில் தானம் வாங்குவது மிகவும் கொடுமையானது". (மனு அத். 4 சு. 86)

அன்பர்களே! பாருங்கள் சூத்திர அரசனை இப் பார்ப்பன நூலார் பேசுவது.

40. "பேராசையுள்ளவனாயும், சாஸ்திரத்தைக் கடந்தவனாயும், க்ஷத்திரிய வம்சத்திற் பிறவாதவனாயுமுள்ள அரசனிடத்தில் எவன் தானம் வாங்குகின்றானோ அவன் மேற்சொல்லும் இருபத்தொரு நரகங்களையும் முறையே அடைகிறான்".

(மனு அத். 4 சு. 87)

அன்பர்களே! இக்காலத்தில் பார்ப்பனரல்லாத அரசர்கள் மேற்குறித்த சுலோகங்களின் பொருளைக் கவனிக்காதது எனோ? இவர்களுக்குத் தானம் கொடுப்பவர் 21-நரகத்தில் வீழ்வது திண்ணம்.

41. "வேதமோதும்போது எழுத்து, சுரம் இவைகள் பிரிந்து தோற்றாமல் ஓதக்கூடாது. சூத்திரன் அருகிலிருக்கும்போதும் ஓதலாகாது". (மனு அத். 4 சு. 99)

அன்பர்களே! இக்கருத்தை "ப்ரஹ்ம சூத்ரம் அபசூத்ராதிகரண"த்துள் கண்டுகொள்க. இத்தகைய

கொடும்பாவிப் பார்ப்பனர்களால் நம்மவர்கள் ஒருபோதும் முன்னேற்றமடையமாட்டார்கள் என்று மறுமுறையும் சொல்லுகின்றேன்.

42. "க்ஷத்திரியன், சர்ப்பம், பிராமணன் இவர்கள் தற்காலத்தில் இளைத்திருந்தாலும் க்ஷேமத்தைக் கோருபவன் அவர்களை யொருபோதும் அவமானஞ் செய்யலாகாது". (மனு அத். 4. சு. 125)

43. "மேற்சொன்ன மூவரும் அவமானஞ் செய்தவனைச் சமயம் பார்த்து நாசம் பண்ணிப் போடுவார்கள். ஆதலால் புத்தியுள்ளவன் அவர்களை அவமானஞ் செய்யக்கூடாது". (மனு அத். 4 சு. 135)

அன்பர்களே! நாம் ஒருவாறு பிழைத்துக்கொண்டிருப்பது ஆங்கில அரசாட்சியிலுள்ள அனுக்கிரகமென்பதை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இக்காலத்திற் பலர் ஒன்றுசேர்ந்து சுதந்திரம் சுதந்திரம் என்று கூக்குரல் இடுகிறார்களே! இப்போது அமுலில் இருக்கிற வேதத்தையும், ஸ்மிருதிகளையும் பார்ப்பனரல்லாதார் ஒதுக்கித் தள்ளவோ தங்களுக்குச் சாதகமாகத் திருத்திக்கொள்ளவோ செய்யாதவரையில் நீங்கள் கேட்கிற சுதந்திரம் பார்ப்பனச் சுதந்திரமாகவே முடியும். அப்படியானால் மேற்கூறிய, மனு அத்தியாயம் 4, பாட்டு 135—136 உம்மைப் பிடித்துச் சாப்பிட்டு விடும்.

44. "கற்பூர முதலிய வாசனைப் பொருட்கள், படுக்கை, வீடு, தருப்பைப்புல், ஜலம், புஷ்பம், பொன், தயிர், அவல், அரிசி, மீன், பால், மாமிசம், கறியமுது இவைகள் வலுவில் வந்தால் நீக்கக்கூடாது".
(மனு அத். 4 சு. 250)

45. "ஒரு பிராமணன் தன்னை மாமிசம் புசிக்க வேணுமென்று கேட்டுக்கொள்ளும் போதும் விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டபோதும் வேறே ஆகாரமில்லாமல் உயிர் போகும்படி நேரிட்ட சமயத்திலும் மந்திரத்தினாற் கொல்லப்பட்ட மிருகாதிகளின் மாமிசத்தைப் புசிக்கலாம்". (மனு அத். 5 சு. 27)

46. "ஏனென்றால் பிரம்மன் இவ்வுலக முழுவதும் ஜீவனுக்காகாரமாக வுண்டு பண்ணினார். ஆகையால் நெல் முதலிய தாவரமும் மிருகம் முதலிய ஜங்கமமும் ஜீவனுக்கு ஆகாரமாகவே யிருக்கின்றன".

(மனு அத். 5 சு. 28)

அன்பர்களே! கிறிஸ்தவர்களும் துலுக்கர்களும் இக்கருத்தைத்தான் சொல்லுகின்றார்கள். அப்படியிருந்தும் அவர்களை 'மிலேச்சர்' என்று ஒதுக்குவது என்ன மதியீனம். இந்நூலைச் சமய நூலாக ஒப்புக்கொள்ளுவோரின் ஜீவகாருண்யப் பிரசங்கத்தின் பொருள் தான் யாதோ?

47. "ஆதலால் உயிருக்கு ஆபத்து நேருங்கால் புசிக்கத்தக்க பிராணிகளை நாள் தோறும் புசித்த போதிலும் தோஷத்தையடையமாட்டான். பிரமனாலேயே புசிக்கத்தக்கவைகளும், கொல்லத்தக்கவைகளும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதல்லவா". (மனு அத். 5 சு. 30)

48. "ஆனால் யாகஞ் செய்து மிகுந்த மாமிசத்தைப் புசித்தல் தேவகாரியமென்றும் தனக்கென்று கொன்று தின்னல் ராட்சச காரியமென்றும் சொல்லப்படும்". (மனு அத். 5 சு. 31)

49. "மாமிசம் கிறயத்திற்கு வாங்கினாலும் தானாகவே சம்பாதித்தாலும் ஒருவன் இஷ்டமாகக் கொடுத்தாலும் அவைகளைத் தேவர்களுக்கும் பிதிர்களுக்கும் நிவேதித்துப் புசிக்கிறவன் தூஷிக்கப்படமாட்டான்".
(மனு அத். 5 சு. 32)

அன்பர்களே! புத்த நாடுகளில் சென்ற சிலர், புத்தர் மாம்சம் சாப்பிடுகிறார்கள் என்று வெறுக்கிறார்கள். ஏனெனின் அவர்கள் கொல்லா விரதத்தைச் சொல்லி, யாராயினும் கொன்று கொடுத்தால் தின்னலாமா யென்று கேள்வி. ஆனால் உன் புத்தகத்தில் கொல்லவும் தின்னவும் விதியிருக்க நீ அவர்களைக் குற்றம் சொல்லுவதற்கு யோக்கியதை உண்டா?

50. "சிரார்த்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட பிராமணன் மாமிசத்தைத் தோஷமென்று புசியாவிட்டால் அவன் இருபத்தொரு ஜனனம் பசுவாகப் பிறப்பான்".
(மனு அத். 5 சு. 35)

51. "எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த எக்கியஞ் செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தையடைகின்றது. ஆகையால் எக்கியத்திற்செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டா".
(மனு அத். 5 சு. 39)

அன்பர்களே! இம்மாதிரியே துலுக்கர் குர்பானி எனும் பசுவேட்டல் செய்கின்றனர். அதை மறுக்கும் பார்ப்பனர் இச்சட்டத்தை வைத்துக்கொள்ளலாமோ?

52. "கொடிகள், பசுக்கள், விருக்ஷங்கள், மிருகங்கள், பக்ஷிகள் இவைகளை எக்கியத்திற்கு உபயோகப்

படுத்தினால் பின்பு அவை உயர்ந்த கதியை யடைகின்றன'' (மனு அத். 5 சு. 40)

53. ''மதுபர்க்கம்,(மாட்டிறைச்சி நெய்யில் வெந்து தேன் கலந்து செய்யும் உருண்டை அல்லது சிற்றுண்டி) எக்கியம் சிரார்த்தம் இவைகளுக்கு உயிர்க்கொலை செய்யலாம்'' (மனு அத். 5 சு. 41)

54. ''சராசர விஷயத்தில் வேதத்திற்சொல்லப்பட்ட ஹிம்சையே ஹிம்சையென்று நினைக்கக்கூடாது. வேதத்தினின்றே தருமம் விளங்குகின்றதல்லவா? ஆதலால் அந்த வேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் புண்ணியமாகவே யிருக்கும்''. (மனு அத். 5 சு. 44)

அன்பர்களே! பார்ப்பனச் சமய நூற்களாகிய வேதங்களும், ஸ்மிருதிகளும் கொலையையே செய்யச் சொல்லும்போது அவைகளைச் சனாதன தரும சாஸ்திரங்களென்றும் கொலையே கூடாது என்று போதிக்கும் சில சமய நூற்களை நாஸ்திக நூற்களென்றுஞ் சொல்லுதல் பொருத்தந்தானா?

55. ''இப்போது சொல்லிவந்த பத்துநாள் தீட்டு பிராமணனுக்கும் அப்படிக்கொத்த க்ஷத்திரியனுக்கு பன்னிரண்டு நாளும், வைசியனுக்குப் பதினைந்து நாட்களும், சூத்திரனுக்கு 30 நாட்களும் தீட்டு இருக்க வேண்டியது''. (மனு அத். 5 சு. 83)

56. ''சூத்திரன் இறந்துபோனால் ஊருக்குத் தெற்குப் பக்கத்திலும், வைசியன் இறந்து போனால் மேற்குப் பக்கத்திலும், க்ஷத்திரியன் இறந்துபோனால்

வடக்குப் பக்கத்திலும், பிராமணன் இறந்துபோனால் கிழக்குப் பக்கத்திலும் எடுத்துக்கொண்டு போகவேண்டியது". (மனு அத். 5 சு. 92)

அன்பர்களே! பிரேத ஊர்வலத்திற்கூடவா பிரிவினை? சூத்திரன் எமனை நாடும் பொருட்டுத் தெற்கே செலுத்துவதாம், பேஷ்!

57. "தீட்டுப்போகும்நாளில் நாலு வருணத்தாருக்குள் பிராமணனுக்கு ஸ்நானத்தாலும், க்ஷத்திரியனுக்கு வாகனம் வில் இவைகளைத் தொடுவதாலும், வைசியனுக்கு கலப்பை, தராசு, கயிறு இவைகளைத் தொடுவதாலும், சூத்திரனுக்கு மூங்கில் தடியைத் தொடுவதனாலும் தீட்டுக் கழிகிறது". (மனு அத். 5 சு. 99)

அன்பர்களே! மலையாள நாட்டில் தீயர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பினராலும் அவ்வாறே இறந்த தீட்டோடு கூடியிருக்கிற உயர் வகுப்பினராலும் தொடப்பட்ட எண்ணெய், உப்பு முதலிய பொருட்கள் அசுத்தமாகின்றன. ஆனால் அதைச்சுத்தப்படுத்த துலுக்கனோ, கிறிஸ்தவனோ தொட்டால் சுத்தமாகும். அன்னான், முதல் நாள் புலையனாயிருந்து அன்றையத்தினம் இந்து சமயத்தினின்று துலுக்கனாகவோ கிறிஸ்தவனாகவோ வந்தவனாயிருந்த போதிலும் குற்றமில்லை. இதைக் குறித்து அவ்வூரில் ஒரு பழமொழி வழங்குகின்றது. (தைலாதி வஸ்துக்கள் அசுத்தமாயின் மௌலூஸனைக் கொண்டு தொடுவிச்செடுக்காம்) அதாவது எண்ணெய் முதலியவை தீட்டுப்பட்டால் மௌலூஸ் (கிறிஸ்தவன்) என்பவனைக் கொண்டு தொடச்செய்து எடுக்கலாமென்று

சொல்லுகிறார்கள். இன்னும் மலையாளத்தில் பார்ப்பன வீட்டில் பறையர், பள்ளர், செப்படவர் முதலிய ஜனங் கள் பார்ப்பனத் தோட்டத்தில் வந்து வேலை பார்க்க வேண்டுமானால் அந்த மனிதன் கழுத்தில் கிறிஸ்துவர் களுடைய அடையாளம் போட்டுக் கொண்டு, கிறிஸ்து மதத்தில் சேர்த்துக் கிட்ட வரும்படி செய்கின்றார்கள். இவர்களுடைய புத்திக்கல்லவோ மரியாதை செய்ய வேண்டும்.

58, "தேவர், இருஷி, பிதுர்க்கள் இம்மூவரிடத்தி லும் மூன்று மூன்று கடனுடன் மனிதன் பிறக்கிறான். அவைகளில் எக்கியத்தால் தேவர்களுடையவும், பிள்ளைப் பேற்றினால் பிதிர்க்களுடையவும், வேதமோதுவதால் இருஷிகளினுடையவும் கடனைத் தீர்த்து ஜோதிஷ் டோமம் முதலிய யாகாதிகளையும் சக்திக்குத் தக்கபடி செய்து பின்பு மோட்சத்திற்கு உபயோகமான சந்நியா சத்தில் மனம் வைக்க வேண்டியது".

(மனு அத். 6 சு. 36)

59. "வேதமோதாமலும், பிள்ளைப் பெறாமலும், யாகம் செய்யாமலும், மோட்சத்திற்கு முயற்சி செய்கிற வன் நாகத்தையடைவான்". (மனு அத். 6 சு. 37)

60 "எஜுர் வேதத்தில் சொல்லிய எல்லாப் பொருள்களையும் தட்சிணையாகவுடைய பிராஜாபத்திய இஷ்டியை (யாகத்தைச்செய்து) அக்கினியை ஆத்ம சமாரோபணம் செய்து கொண்டு கிரகஸ்தா சிரமத்தி லிருந்தே சந்நியாசஞ் செய்து கொள்ளலாம்".

(மனு அத். 6 சு. 38)

அன்பர்களே! இம்முறையைக் கவனித்தால் அப்பிராமணர்களுக்குச் சந்நியாசத்தில் எங்ஙனம் அதிகாரமுண்டு? சந்நியாசிக்க வேண்டுமாயின், வேதமோதுதலும், ஜோதிஷ்டோமதி யாக கர்மங்களும் செய்து முடிக்கவேண்டுமாம். இவைகள் அப்பிராமணர்களால் செய்து முடிக்க நாளது வரையில் எந்த சௌகரியங்களுமுண்டாகவில்லை. ஆதலாலன்றோ, அப்பிராமண சிஷ்டாச்சாரமுடைய உத்தம சாதுக்களைப் பிச்சைக்காரர்களென்றும், பரதேசிகளென்றும், ஆண்டிகளென்றும், பண்டாரம் என்றும் இன்னும் முதலான பேர்களைப் பார்ப்பனர் சொல்லி வருகிறது. பிராமணரல்லாத பிரபுக்கள் இவ்வார்த்தைகளைக் கேட்டு வெட்கமில்லாமல் சும்மாயிருக்கிறார்கள். இவர்களா வீரத்தன்மையுடையவர்கள்?

61. "சந்நியாச ஆச்சிரமஞ்செய்து கொண்டவன் பரிசுத்தமான கமண்டலம், தண்டம், பௌத்திரம் இவை முதலானவற்றைக் கிரகித்துக்கொண்டு ஒருவராற் கொடுக்கப்பட்டாலும் விஷய போகங்களில் விருப்பமில்லாமல் மௌன விரதத்தோடு இருக்கவேண்டியது".

(மனு அத். 6 சு. 41)

அன்பர்களே! இம்முறையான சந்நியாசத்திற்கு சங்கராச்சாரியார் பீடம் ஆகும். அதாவது வேதாந்த பரம்பரையென்று சொல்லுவார்கள். இந்த ஆச்சாரியர்கள் இற்றைய நாள் வரைக்கும் அப்பிராமணரில் ஒருவருக்காவது சந்நியாசங் கொடுத்ததாகவும், வேதாந்த சிரவணஞ் செய்ததாகவும் மற்றும் ஏதாகினும் அபிவிருத்தி உண்டாக்கினதாகவும் சரித்திர வாயிலாகத் தெரியவில்லை.

அப்பிராமணர்களுக்கு அதப்பதனத்து (க்ஷீணதிசைக்கு) ஏதுவாய்ப் பிரம்ம சூத்திரம் அபசூத்திரப் பிரகரணத்தில் நன்றாகப் பலமாய் வரைந்துள்ளது. தபசு, வித்தியாபிவிருத்தி, ஒழுக்கம், சமூக ஒற்றுமை, ராஜாங்க அபிவிருத்தி என்கிற ஐக்துவிதமான முன்னேற்றத்தையும் பலமாகத் தடுக்கும் பரம்பரையை நடத்திவரும் ஆச்சாரியப் பீடமாகும். இந்தப் பரம்பரையே காரணமாகும். நமது நாடு இவ்வாறு அடிமைத் தனத்துக்குள்ளானதற்கு இந்த ஆச்சாரியருக்கன்றோ வேதாந்த பரம்பரையென்று சொல்லிக்கொள்ளும் சில சாதுக்களுக்கு நமது ஜனங்கள் பல்லக்குத் தூக்குவதும், பாதகாணிக்கை சமர்ப்பிப்பதும் என்ன மதியீனம்! நமது அப்பிராமண சகோதரர்களாகிய உத்தமத் துறவிகளைக் கிஞ்சித்தேனுங் கவனிக்கிறார்களா? இல்லையே! அந்தோ பரிதாபம்!

62. "அக்கினியில் பாகஞ் செய்தவனாயும் வீடில்லாதவனாயுமிருந்து கொண்டு, நாள் தோறும், பிச்சைக்காகக் கிராமத்திற்குள் பிரவேசிக்க வேண்டியது. ஒரு பொருளிலும் விருப்பமில்லாதவனாயும் ரோக நிவர்த்திக்காக ஔஷதஞ் சாப்பிடாதவனாயும், ஸ்திர புத்தியாயும், ப்ரம்ம சிந்தனையுடையவனாயும் இரவும் பகலும் காட்டில் ஏகாந்தத்தில் வசிக்கவேண்டியது".

(மனு அத். 6 சு 43)

63. "மண் பாத்திரம் வைத்துக்கொள்ளுதல், மரத்தினடியில் வசித்தல், கந்தைத் துணியைக் கட்டிக் கொள்ளுதல், ஏகாங்கியாயிருத்தல், சத்துரு மித்துருவென்பதின்றி யாவரையும் சமமாய்ப் பார்த்தல் இவை

யெல்லாம் மோக்ஷத்தை விரும்பினவனுக்கு அடையாளம்''. (மனு அத். 6 சு. 44)

அன்பர்களே! மோக்ஷத்தை விரும்பினவனுக்கு இது அடையாளமானால், கடவுள் பஜனை செய்வது எதற்கடையாளமாகும்? இதில் சன்னியாசிகள் கடவுளை பஜனை செய்யச் சொல்லவில்லையே. ஸ்மார்த்த சந்நியாச முறைக்கு மேற்காட்டியது போல இருக்கவேண்டியது. நிற்க, இப்போது, நிலை கெட்டிருக்கும் காவி கட்டின சந்நியாசிகளை கிரகஸ்தன் என்று ஏன் அழைக்கக் கூடாது? இவ்வாச்சாரியார்கள் ஊர்வலஞ் சென்று உபதேசித்தலென்கின்ற பெயரைநாட்டி யானை, குதிரை, ஒட்டகை, எருதுகள், பல்லக்கு, ரதம் இவைகளோடும் நூற்றுக்கணக்கான மனிதர்களோடும் கிராமாந்தரங்களிற் செல்லுங்கால், அங்கு உள்ள ஏழை ஜனங்கள் பரிதபிக்கும் பாட்டை என்னென்று சொல்லுவேன். இது எவ்வாறிருக்கிறதென்றால் ஒரு பலஹீனன் மேல் யானை விழுந்தது போலாம். இவர்களுக்கு இன்றியமையாத உணவும், பரிசும், போதுமானவரை கொடாவிடில் ஜாதிப் பிரஷ்டஞ் செய்வதும், சிக்ஷை செய்வதும், சாபமிடுவதும், முதலான கோபங்களுக்கும் உட்படுத்துவார்கள். இவர்களுக்கா, நம்நாட்டு ஏழை ஜனங்களின்மேற் கிருபை தோன்றுவது? அந்தோ பரிதாபம்! மேலும் மனு 6-ம் அத்தியாயம் முழுவதும் கவனித்தால், சாதுக்கள் ஒழுக வேண்டிய நிலைமை முற்றும் சுருக்கமாக விளக்கியிருக்கிறது. ஆனால் இது பார்ப்பன விஷயமென்று சொல்லுவார்கள். அப்பிராமணர்கள் இந்தக் காலங்களில் சைவ சமய ஆதீனமாகிய கைலாச பரம்பரை மடத்தலைவர்களிடத்தில் தீட்சை பெற்று துறவு அடைவதற்குள்ள

வசதியுண்டு. ஆனால் அவ்வசதியானது கள்ளர், வேடர், மறவர், அகம்படியர் ஆகிய இவர்கள் தங்கள் குலத்தை மாற்றி வேளாளர் என்னும் பெயர் புனைந்த நவீன அவாந்தர சைவர்களுக்கே யுரித்தாம். மற்றுமுள்ளோர் கதியாதாம்? இம்மடத்தலைவர்கள் சாதுக்களை முறையாக ஆதரிக்காத காரணத்தால் அல்லவா இந்நாட்டில் பலவித அன்னியமதம் புகுந்து நம் சகோதரர்கள் இடர்பட நேரிட்டதும் நமது மதம் க்ஷீணதிசையடைந்ததும், இச்சைவ கைலாச பரம்பரை மடத்தலைவர்கள் கோடரிக்காம்பேபோல் சாதுக்களுக்கும் தேசத்துக்கும் இடையூறுசெய்ய ஏதுவாயிருக்கவேண்டுமா?

64. "அரசன் தக்கபடி (ஸ்மிருதிப்படிக்கு) தண்டனை செய்யாதபோது அந்த தேசத்தில் எக்கிய யாகங்களில் புரோடாம் சத்தை காக்கை முதலானவைகள் தின்றுவிடும். அவிசை நாய் முதலிய நக்கும், அவனவன் பொருள் அவனவனுக்குச் சொந்தமாக மாட்டாது. தாழ்ந்த ஜாதியாரும் உயர்ந்த ஜாதியாராவார்கள்."

(மனு அத். 7 சு. 21)

65. "அரசன் தண்டனை செய்யாவிடில் உலகத்தார் ஜாதி மரியாதை நீங்கி நடப்பார்கள்."

(மனு அத். 7 சு. 24)

அன்பர்களே! இம்மதத்தை ஒத்துக்கொண்டு வாழும் ஜனங்கள் இந்த உலகத்தின் கண் எவ்வாறு உய்வார்கள்? அபிவிருத்தி உண்டாக்கப்படாதென்று போதிக்கும் சமயமல்லவா ஆரிய சமயம்? அதைப்பற்றின இராஜாங்கமல்லவோ ஆரிய ராஜாங்கம்! சாஸ்திரமரியாதை என்

றால் என்ன? இவ்வத்தியாயத்தில் எழுதின முறையை யல்லவோ சாஸ்திரம் சொல்லுகிறது! ஏ! சர்வேசுரா! இப்படிப்பட்ட இராஜாங்கத்தையும் ஆரிய மதத்தையும் சீர்கேடாகச் சிதறச்செய்த உன்னுடைய பாதாரவிந்தங் களுக்கு வந்தனம்.

66. "அந்த தண்ட புருஷனைத் தக்கபடி ஆளுகிற அரசன் தர்மார்த்த காமங்களில் விருத்திபடையான். வேத ஸ்மிருதி முறைப்படிக்கு ராஜ்ஜிய பரிபாலனம் செய்யாமலிருக்கிற அரசனை அந்தத் தண்டத்தைக் கொண்டே மந்திரி முதலானவர்கள் கொன்றுவிடுவார் கள்." (மனு அத். 7 சு. 26)

அன்பர்களே! இதன்பொருளை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். அப்பிராமணர்களுக்கு யாதொரு முன் னேற்றத்திற்கும் உதவி புரியாதிருந்ததென்று நன்றாகத் தெரியவருகிறது. இவ்விதமான பார்ப்பனர் செய்கை களால் முன்னுள்ள அரசர்கள் மிகவுந்துன்புற்று நாச மடைந்ததாக பல மத நூற்களும் சொல்லிவருகிறது. ஐயோ! பாரத நாட்டு மக்களே ஆழ்ந்து யோசித்து நிதானமாக இம்மதத்திலும், இம்மதத்தையாளும் பார் பனர்களிடத்திலும் கவனித்து நடமாடுங்கள்.

67. "பிராமண குலத்தில் பிறந்தவன் கர்மானுஷ் டானமில்லாதவனாயினும், அரசன் செய்யவேண்டிய தீர் மானங்களைச் செய்யலாம்; சூத்திரன் ஒருபொழுதும் தீர் மானஞ் செய்யலாகாது." (மனு அத். 8 சு. 20)

அன்பர்களே! வேதத்திலும் இவ்வாறே சூத்திரர் களைப்பற்றிச் சொல்லியுள்ளது.

68. "எந்த தேசத்தில் சூத்திரன், அரசன் செய்ய வேண்டிய தரும விசாரணையைச் செய்கிறானோ அந்த தேசமானது, சேற்றிலகப்பட்ட பசுவைப்போல மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே துன்பத்தில் ஆழ்ந்து விடுகின்றது." (மனு அத். 8 சு. 21)

அன்பர்களே! தற்போது நடைபெற்று வரும் ஆங்கிலேயர் ஆட்சியில் சமுதாயத்திற்கு எவ்வளவு நன்மை நடைபெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

69. "யாதொரு தேசமானது சூத்திரர், தெய்வ நிந்தனை செய்வோர், இவர்கள் நிறைந்தும், பிராமணர்களில்லாமலும் இருக்கிறதோ அந்த தேச முழுதும் வறுமை, பிணி இவைகளால் துன்புறுத்தப்பட்டு சீக்கிரத்தில் அழிந்து போய் விடும்." (மனு அத். 8 சு. 22)

அன்பர்களே! சூத்திரர் (பிராமணரல்லாதார்) அரசாங்க உத்தியோகங்களில் இருக்கலாகாதென்றும் சட்டம் (மனுநீதி) முற்காலங்களில் நடந்து வந்தது போலவே, தற்காலம் ஒழுக்கத்தில் இல்லை. இக்காலத்தில் ஆங்கில அரசாட்சியன்றோ நம் நாட்டில் நடந்து வருகிறது. ஆயினும் ஆங்கிலேய சம்மந்தமில்லாத (நேபாள) நாட்டில் இன்றைக்கும் மனுநீதி வழுவாது நடைபெற்று வருகிறது.

70. "பிராமணனைச்சொல் என்றும், க்ஷத்திரியனை உண்மையைச்சொல் என்றும், வைசியனை நீ பொய் சொன்னால் உன்னுடைய பசுவும் விதையும் பலியாது அழியுமென்றும், சூத்திரனை நீ பொய் சொன்னால் மறை

யோனைக் கொன்றது முதலிய பாவங்களை அடைவா யென்றும் சத்தியம் கேட்கவேண்டியது.''

(மனு அத். 8 சு. 88)

அன்பர்களே! தற்போதுள்ள ஆங்கில அரசாட்சியில் வகுப்புப் பிணக்கின்றி அனைவரையும் நியாயாதிபதியவர்கள் சர்வ வல்லாமையுள்ள தெய்வத்தின் சாட்சியாகச் சொல் என்று கூறுவதற்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம்.

71. ''அநேக ஸ்திரீகளுக்குள்ளவன் அந்த ஸ்திரீகளின் புணர்ச்சி விஷயத்திலும், விவாஹ விஷயத்திலும், பசுமாடுகள் புல் விஷயத்திலும், பிராமணரைக் காப்பாற்றும் விஷயத்திலும் பொய் சொன்னால் குற்றமில்லை.''

(மனு அத். 8 சு. 112)

அன்பர்களே! தற்போது ஆங்கில அரசாட்சியில் எக்காரணத்தைக்கொண்டும் பொய் சொல்லக்கூடாது. சொன்னால் சொன்னவனுக்குத் தகுந்த தண்டனை கிடைக்குமென்பதை பிராமணர் உணர்ந்திருக்கிறார்கள் போலும்.

72. ''வாதி பிரதிவாதிகளை விசாரனை செய்கையில் பிராமணனை சத்தியமாகச் சொல்லென்றும், க்ஷத்திரியனை உன் வாகனம், ஆயுதம் இவைகளின் மேல் ஆணையிட்டுச் சொல் என்றும், வைசியனை உன் பசு, தானியம் இவைகளின் மேல் ஆணையிட்டுச் சொல் என்றும், சூத்திரனை நான் பொய் சொன்னால பஞ்சமா பாதகங்களை அடையக்கடவேன் என்று சொல்லச்சொல்லியும் பிரமாணம் கேட்கவேண்டியது.''

(மனு அத். 8 சு. 113)

அன்பர்களே! இவைகளைக் கவனிக்குங்கால் ஆங்கில அரசாங்கத்தில் எவ்வளவு சம உரிமை இருக்கிறதென்பதை ஆராய்துணர்வீர்களாக.

73. "பிரமாணம் செய்கிற சூத்திரனை, நெருப்பில் பழுக்கக் காச்சின மழுவாகிலும் எடுக்கச் செய்யவேண்டும். அல்லது தண்ணீரில் அமிழ்த்த வேண்டும். அவன் பிள்ளை, மனையாள் இவர்களின் தலையிலாவது அடிக்க வேண்டும்." (மனு அத். 8 சு. 114)

74. "மழுவெடுத்த சூத்திரனுக்குக் கை வேகாமலும், தண்ணீரில் அமிழ்த்தப்பட்ட சூத்திரன் மிதக்காமலும் சாகாமலும், பிள்ளை, மனையாள் இவர்களின் தலையில் அடித்ததினால், யாதொரு துன்பமும் நேரிடாமலும் இருந்தால் அவன் சொல்லும் பிரமாணம் சத்தியம் என்று உணரவேண்டும்." (மனு அத். 8 சு. 115)

அன்பர்களே! யார் யார் எத்தகைய குற்றங்கள் செய்திருப்பினும் இத்தகைய கொடுமையான பிரமாணங்கள் ஆங்கில - ஆட்சியில் நடைபெறவில்லை யென்பதைக் கவனிக்கத்தக்கது.

75. "பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டும், திருடன் பொருளை எடுத்துச் செல்லும் போதும், யாகம் செய்பவனைக் காப்பாற்றும் பொருட்டும் யுத்தம் செய்து பிராமணரல்லாதாரைக் கொன்றவனுக்கு அதர்மம் பாவம் நேரிடாது." (மனு அத். 8 சு. 143)

அன்பர்களே! ஆரியர்கள் காட்டுமிராண்டிகள் போல வரை முறையில்லாது கண்டவர்களைப் புணர்ந்த

காரணத்தினாலும், அவர்களை பிராமணரல்லாதார் உதைத்து அடித்து துன்புறுத்தியதினாலும், பிராமணன் வாக்கு வேதவாக்கு என்று கருதாத ஜனங்களை பிராமணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் யுத்தம் செய்யவேண்டுமென்று தூண்டுகிறார்கள் போலும்.

76. "சூத்திரன் பிராமணர்களைத் திட்டினால் அவன் தாழ்ந்த யிடமான காலில் பிறந்தவனாகையால் அவன் நாக்கை அறுக்கவேண்டும்".

(மனு அத். 8 சு. 270)

அன்பர்களே! நமக்கு பிராமணர்களால் எத்தகைய துன்பம் நேரிட்ட காலத்தும் பிராமணர்களை நாம் குறை கூறலாகாதாம். மீறினால் கொடுந் தண்டனையை அடைய வேண்டுமாம். இவைகள் பிராமணர்களின் சட்டமாம்.

77. "பிராமணர்களின் பெயர் ஜாதி இவைகளைச் சொல்லித் திட்டுகிற சூத்திரன் வாயில் பத்து அங்குல நீளமுள்ள இரும்புக் கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைக்கவேண்டும்." (மனு அத். 8 சு. 271)

78. "பிராமணனைப் பார்த்து நீர் இதைச் செய்ய வேண்டும் என்று தரும உபதேசம் செய்கிற சூத்திரன் வாயிலும் காதிலும், எண்ணையைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்." (மனு அத். 8 சு. 272)

அன்பர்களே! பிராமணன் எத்தகைய இழிதொழிலைச் செய்த போதிலும், அவனுக்கு, அறிவு தேர்ந்தொழுகுகின்ற பிராமணரல்லாதார் இனிய வசனங்களைக் கூற

லாகாதாம். மீறினால் கொடுந்தண்டனையை அனுபவிக்கவேண்டுமாம். சமணம் (புத்த மதம்) மகம்மதிய மதம், கிறிஸ்தவ மதம் முதலியவைகளில் அறிவுபடைத்த எவனும், பிட்சு வாகலாம், லெப்பையாகலாம், பாதிரியாகலாம்; ஆனால் இந்து மதத்தில் ஒழுக்கமற்ற பிராமணனாக இருந்த போதிலும் அவனுக்கு இனிய வசனங்களைக் கூற அதிகாரமுண்டாம். இதிலிருந்தாவது பிராமணரல்லாதார் தங்கள்நிலைமைகளைக் கவனிப்பார்களாக.

79. "வைசிய சூத்திரர்கள் ஒருவருக்கொருவர் திட்டிக் கொண்டால் வைசியனுக்கு இருநூற்றைம்பது பணமும், சூத்திரனுக்கு ஐந்நூறு பணமும் அபராதம் விதிக்கவேண்டும்". (மனு அத். 8 சு. 277)

அன்பர்களே! மேற்கூறிய நாவறுத்தல், இரும்புக் கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வாயில் வைத்தல், எண்ணெயைக் காய்ச்சிக் காதிலும் வாயிலும் ஊற்றல் முதலியவைகள் ஆங்கில அரசாங்கத்தில் இல்லை யென்பதை யாவரும் அறிந்த விஷயம். ஆதலால் இவ்வரசாங்கம் கூடியவரை தர்மசிந்தனையுள்ளதேயாம்.

80. "சூத்திரன் துவிஜ ஜாதிகளினது (ஆரியர்கள்) எந்தெந்த அவயவங்களைக்கையினாலேனும், தடியினாலேனும் தாக்குகின்றானோ; அவனது அந்தந்த உறுப்புகளை அறுத்தெறிய வேண்டும். அடித்தால் கையையும், உதைத்தால் காலையும் வெட்டிவிடவேண்டும்".

(மனு அத். 8 சு. 279, 280)

அன்பர்களே! இதிலிருந்து முன் காலத்தில் ஆரியர்களாகிய பிராமணர்களுக்கும் ஜனநாயகத்துக்கும் முற்காலத்தில் ஒரு பெரிய யுத்தம் உண்டாகியிருக்கிறது என்று ஊகிக்க இடமுண்டாகிறது.

81. "பிராமணனுடன் ஒரே ஆசனத்தில் சூத்திரன் உட்கார்ந்தால் அவனுடைய இடுப்பில் சூடு போட்டாவது ஆசன பக்கத்தைச் சிறிது அறுத்தாவது ஊரை விட்டுத் துரத்தவேண்டும்". (மனு அத். 8 சு. 281)

82. "பிராமணனுடைய தலைமயிர், தாடி, மீசை, கால், கழுத்து, ஆண்குறி இவைகளைப் பிடிக்கிற சூத்திரனது கைகளை யோசிக்காமல் அறுக்கவேண்டும்". (மனு அத். 8 சு. 283)

83. "வேதம், ஸ்மிருதி, தர்மப்படி ஜனங்கள் ஒழுகாத காலத்தும், அரசனால் நடத்தப்படாத காலத்தும், வர்ணாச்சிரம முறை அழியும் போதும், பிரம்ம, க்ஷத்திரிய, வைசியாள் மூவரும் ஆயுத மெடுத்துக்கொண்டு வர்ணாச்சிரம தர்மத்தைக்காப்பாற்ற யுத்தம் செய்ய வேண்டும்". (மனு அத். 8 சு. 348)

84. "பிராமணரல்லாதார் மற்ற மூன்று வருணத்தாரின் மனைவியைப் புணர்ந்தால், அவனது உயிர் போகும் வரைத்தண்டிக்க. ஆனால், நான்கு வருணத்தாருக்கும் பொருள், புத்திரன் இவைகளைவிட மனைவியை விபசார தோஷமின்றிக் காப்பாற்றுவதே மேலான தருமம்". (மனு அத். 8 சு. 359)

அன்பர்களே! பிராமணன் மற்ற மூன்று வருணத்தாரின் பெண்களை எவ்விதம் புணர்ந்தாலும் அது தர்மமே யொழிய விபசாரமாகாதாம். மலையாள தேசத்தில் அரசர் மாளிகையில் பிராமணர்கள் நடத்தி வருகின்ற அக்கிரமங்களைக் கவனிக்கிற எவன்தான் துக்கப்படாதிருக்க முடியும?

85. "ஒரு கன்னிகை (மணமாகாத பெண்) போக விருப்பத்தினால் உயர்ந்த ஜாதிப் புருஷனைச் சேர்ந்தால் அவளைக் கண்டிக்கப்படாது, உயர்குலப்பெண் ஒரு தாழ்ந்த சாதியானை யடைந்தால் அவளை வீட்டிலேயே கண்டித்து அடக்கவேண்டியது". (மனு அத். 8 சு. 365)

அன்பர்களே! ஆரியர்களாகிய பிராமணர் ஆட்சியில் அவர்கள் பெண்கள் தாந்தோன்றித்தனமாக திரிந்தார்கள் போலும், ஆனால் அவ்வாறு செய்த பிராமணரல்லாதாரை கொல்லவேண்டும் என்பதை அறிக.

86. "உயர்குலப் பெண்ணைப்புணர்ந்த இழி குலத்தோனை சாகும்வரையில் தண்டிக்க".

(மனு அத். 8 சு. 3:6)

87. "சூத்திரன், காவலில்லாத (இஷ்டப்போல் திரிகின்ற) பிராமணப் பெண்களைப் புணர்ந்தால் பீஜம், ஆண்குறி இவைகளை அறுக்கவேண்டியது. காக்கப்பட்ட பெண்களைப் புணர்ந்தால் உடல்முழுவதும் துண்டு துண்டாய் வெட்டி அவனுடைய பொருளனைத்தும் கொள்ளையிட வேண்டும்" (மனு அத். 8 சு. 374)

88. "பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனைத் தூக்குப்போடவேண்டிய நிபந்தனை ஏற்பட்டால் அவன் தலையை மொட்டையடித்தல் வேண்டும்; அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வருணத்தாருக்கு கொலையே தண்டனை". (மனு அத். 8 சு. 379)

89. "கொடிய குற்றம் செய்தவனாயினும், பிராமணனைக் கொல்லாமலும், மற்ற எத்தகைய துன்பத்திற்கும் ஆளாக்காமலும் அவன் பொருளைக்கொடுத்து அயலூருக்கு அனுப்பவேண்டும்". (மனு அத். 8 சு. 380)

90. "அரசனானவன் பிராமணனை எத்தகைய குற்றங்களுக்கும் கொல்ல நினைக்கக்கூடாது."
(மனு அத். 8 சு. 381)

அன்பர்களே! விபசாரம் செய்கின்ற பிராமணப் பெண்களை பிராமணரல்லாதார் புணர்ந்தால் அவர்களுக்கு கடுந்தண்டனை விதிக்கப்படுமாம். பிராமணரல்லாத குலப்பெண்களை பிராமணர் விபசாரத்திற்கு பலாத்காரம் பண்ணினால் அவர்களுக்குத் தண்டனையில்லையாம். மேலும் பொருள் கொடுத்து அனுப்பவேண்டுமாம். இவைகளை உணர்ந்தாவது பிராமணீயத்தை ஒழிப்பார்களாக.

91. "அரசன் வைசியனை வட்டி வாங்குதல், வர்த்தகம், பயிரிடுதல், பசுவைக் காத்தல் இவைகளையும், சூத்திரனை மற்ற மூன்று வருணத்தாருக்குப் பணிவிடை செய்யவும் சொல்லவேண்டியது. அப்படிச் செய்யாவிடில்

உலகம் அழிந்து விடுமாதலால் தண்டித்து அங்ஙனம் செய்விக்கவேண்டும்.'' (மனு அத். 8 சு. 410)

அன்பர்களே! வைசிய சூத்திரர்களை முன்னேற வொட்டாமல் தடுத்திருப்பதைக் கவனியுங்கள். இவ் வைசிய சூத்திரர்களுக்கு வேத ஸ்மிருதிகளின்படி அத்யாத்மாபிவிர்த்தி சமூக ஒற்றுமை, கல்வி, ஒழுக்கம், அரசியல், சமூகம் இவ்வைந்து துறைகளில் ஒன்றிலேனும் முன்னேறும் வழியில்லாது தடுத்திருக்கின்றது. இங்ஙனம் தடுத்திருக்கின்ற வேதம் தரும சாஸ்திரம் முதலிய நூற்களை தங்கள் சமய நூற்களென்றும் மேற்கண்ட நூற்களை எழுதிய பிராமணர்களை சமயத்துக்குத் தலைவரென்றும் வழிபட்டுக்கொண்டு நம் தேசம் அன்னியர்களால் ஆளப்படுகின்றது. நாம் முன்னேற்றமடையவில்லையே நம்மவர்களை ஆடுமாடுகளைப்போல் வெளிநாடுகளுக்கு ஏற்றிச் சென்றார்களே என்று துக்கிப்பதில் பயன் என்ன?

92. ''பிராமணன் கூலிகொடுத்தோ கொடாமலோ சூத்திரனை வேலை வாங்கலாம். ஏனென்றால் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரம்மனால் படைக்கப்பட்டிருக்கின்றான்.'' (மனு அத். 8 சு. 413)

அன்பர்களே! இத்தகைய அநியாயச் சமயத்தில் இருக்கிறவரை உயர்தர உத்தியோகத்திலிருக்கிற பிராமணர்கள் ஆங்கிலேயரின் அனுக்கிரகத்தால் ஏதோ சில உத்தியோகங்களைப் பெற்றிருக்கும் நம்மவர்களைப் பல வழிகளால் துன்புறுத்துவதைப் பற்றியும் பள்ளிக்கூடங்களில் நமது பிள்ளைகளை உயர்தரக் கல்விமான்களாக

வொட்டாமல் தடுத்து வருவதைக் குறித்தும் கவலைப் படுவானேன்.

93. "சூத்திரனானவன் தன் தலைவனாகிய பிராமணனால் அடிமைத்தனத்தினின்றும் நீங்கியிருந்தாலும் அவ்வடிமைத்தனம் அவனைவிட்டு நீங்காது. சூத்திரன் பிறந்தபோதே அவ்வடிமைத்தனமும் அவனை விட்டுப் பிரியாதவாறு அவன் கூடவே பிறந்ததாகையால்எங்ஙனம் நீங்கக்கூடும்? அவன் மறுமைக்காகவும் பிராமணனுக்குத் தொண்டு செய்யவேண்டும்." (மனு அத். 8 சு. 414)

அன்பர்களே! பிராமண சமயமாகிய இந்துமதம் தவிர மற்ற சமயங்களில் மறுமைக்காகக் கடவுளை வழிபட அரசனுக்கும் குடிகளுக்கும் ஒரேவிதமான உரிமை இருக்க இந்து மதத்தில் பிராமணனைத் தவிர ஏனையோருக்கு அவ்வுரிமை இல்லை. மறுமைக்காகவும் பிராமணனைத்தான் வழிபட வேண்டுமாம். இந்து சமயத்தில் பிராமணரல்லாதாருக்கு கடவுளைப் பூஜிக்க ஆலயங்களாவது சுயமதிப்புடன் படிக்கத்தக்க சமய நூற்களாவது கல்வி கற்றுக்கொள்ள வசதியாவது இருக்கின்றனவா? ஆங்கிலத் துரைத்தனத்தாரின் உதவியால் சிலர் காவிகட்டித் துறவிகள் என்று வெளிவருகின்றார்கள். அவர்களும் பிராமணர்களைப் பார்த்தவிடத்தில் கை குவித்து வணங்கி'சுவாமி! அடிமை',என்பதை இன்றைக்கும் காணலாம். இத்தகைய துறவிகள் ஏனையோரைப் பார்த்தால் தங்களைப் பெரும் படிப்பாளிகளென்று எண்ணி இறுமாந்திருப்பார்கள். அச்சமயம் அத்துறவிகளின் விழிகள் அரைவாசிதான் திறந்திருக்கும். இத்தகைய பரதேசிகள் பலர் உண்டு. வேதாந்த சாதுக்க

ளென்னும் ஆதீனப் பண்டாரத்தாரும் இவர்கள் அனைவரும் பிராமணனைப் பார்த்து அடிமை என்று சொல்வார்கள். ஆனால் பிராமணன் தன்னை ஒருக்காலும் அடிமை என்று சொல்லிக்கொள்ள மாட்டான். தென்னிந்திய வாசிகளான சாதுக்களும் யாத்திரையின் நிமித்தம் வடநாட்டிற்குச் சென்றாலும் இவ்வடிமைச் சனியன் இவர்களை விட்டு நீங்குவதில்லை. ஏனென்றால் ஊரெங்கும் தென்னாட்டுப் பிராமணர்களிருப்பதாலும் தமிழனை ஒடுக்குவதே அவர்கள் முதற் கொள்கையானபடியாலும் தென்னாட்டுத் துறவிகளைக் கண்டவிடத்தில் சூத்திரர் என்று சொல்லி இழிவுப்படுத்துகிறார்கள். நம்மவர்கள் இங்ஙனம் அவமதிக்கப்படுவது பிராமண சமயத்தை நம்புவதினாலன்றோ? அந்தோ பரிதாபம்! பரிதாபம்!

94. "சூத்திரர் ஏழு வகைப்படும். 1 யுத்தத்தில் புறங்காட்டி யோடுபவன், 2 யுத்தத்தில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன், 3 பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்கிறவன், 4 விபசாரி மகன், 5 விலைக்கு வாங்கப்பட்டவன், 6 ஒருவனால் கொடுக்கப்பட்டவன், 7 தலைமுறை தலைமுறையாக ஊழியம் செய்கிறவன்; இவ்வெழுவருமாம்". (மனு அத். 8 சு. 415)

அன்பர்களே! ஆங்கிலேயர்கள் இந்துக்கள் அனைவரையும் ஒரே மாதிரியாகத் தங்களுக்கு அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பது போலவே பிராமணர்களும் வேளாளர் முதல் சக்கிலியர் வரைக்கும் பல பிரிவுகளாக இருக்கிற தமிழர்களைச் சூத்திரர் (அடிமை) என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் முற்காலத்தில் நம் நாட்டை ஆண்டு வந்த அரசர்களைப்

பிராமணர்கள் தந்திரத்தால் தங்களுக்குக் கீழ்ப்படியச் செய்தும் அங்ஙனம் கீழ்ப்படியாதவர்களைக் கொன்றும் ஒடுக்கினார்கள். இக்காரணத்தால் அக்காலத்திய குடிகள் அனைவரையும் சூத்திரர்களென்றே கருதப்பட்டு காளடைவில் அவர்களில் சிலருக்கு க்ஷத்திரியர் என்கிற பட்டத்தைக் கொடுத்து மற்றவர்களை என்றென்றும் (இந்து மதத்திலிருக்கிறவரை) அடிமைகளாக்கி விட்டார்கள். நீதி நெறி பிறழாது அரசாட்சி செய்து வந்த மாபலிச் சக்ரவர்த்தியைச் சதி செய்த ஒரு குள்ளப் பிராமணனின் (வாமனாவதாரம்) கதையே அரசர்களைத் தந்திரமாய்க் கொன்று ஒடுக்கின சரித்திரத்திற்குச் சான்று பகரும். ஆதலால் நம்முடைய வாழ்நாளை வீணாகப் போக்குகின்ற நம்மைப் பிடித்த பிராமண மதப் பேயை நான் தமிழன் என்கிற உரிமை மந்திர உபதேசத்தை ஜெயிப்பதின் வாயிலாக ஓட்டுங்கள்.

95. "மனையாள், பிள்ளை, வேலைக்காரன் (சூத்திரன்) இவர்கள் ஏதேனும் பொருளைச் சம்பாதித்தால் அப்பொருள் தலைவனாகிய பிராமணனுக்குச் சேரவேண்டுமேயன்றிச் சம்பாதித்தவர்களைச் சேராது."

(மனு அத் 8 சு. 416)

96. "பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளை கைப்பற்றலாம்; அடிமையாகிய சூத்திரன் எவ்விதப் பொருளுக்கும் உடையவனாகமாட்டான்."

(மனு அத். 8 சு. 417)

97. "வைசிய சூத்திரர்களுக்கு தங்கள் தங்கள் குலத்தொழிலைச் செய்யுமாறு அரசன் கட்டளையிடுக; இன்றேல் உலகம் அழிந்து விடும்."(மனு அத். 8 சு.418)

அன்பர்களே! மேற்கண்ட சுலோகங்கள் பிராமண ரல்லாதாரை அடக்கி பிராமணர் வயிறு வளர்க்கும் தந்திரமேயாம். உதாரணமாக மலையாள நாட்டில் இக்காலத்திலும் வழங்கி வருகிற ஒரு கதையைத் தெரிந்து கொள்ளுங்கள். மலையாளத்தில் கொச்சி சமஸ்தானத்தில் இன்றைக்கு சுமார் 150 வருடங்களுக்குமுன் உண்ணிக் கண்டன், மணிக்கண்டன் என்னும்பெயரையுடைய சகோதரர் இருவர் வர்த்தகத் துறையில் அயல் நாடுகளுக்குச் சென்று பெரும் பொருளைச்சம்பாதித்துக் கொண்டுவந்து கோடீசுவரர்களாக இருந்தார்கள். இச்சகோதரர்களுக்கு ஒரே ஒரு தங்கை இருந்தாள். அவளுக்குக் கலியாணம் நடக்கும் போது அவ்வூர் அரசனை வரவழைத்து முத்துப் பந்தலின் கீழ் உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்து நவரத்தினங்களைத் தங்கக் கூடைகளில் எடுத்து அரசன் பாதங்களில் சொரியும்போது, அக்கொடிய பாதக அரசன் தன் கைவாளினால் அவ்விருவர்களையும் வெட்டி வீழ்த்தி அவர்களின் பொருள் அனைத்தையும் கொள்ளையிட்ட தோடு மணக்கோலத்தோடிருந்த மாப்பிள்ளையும் பெண்ணும் அணிந்திருந்த நகைகளையும் பட்டாடைகளையும் பிடுங்கி அக்கணமே பிராமணர்களுக்கு அடிமையாக்கிப் பயிர்த்தொழில் செய்ய அனுப்பிவைத்தானாம். இக்கொடுஞ் செயலுக்குக் காரணம் மனுவின் தர்ம நீதியன்றோ? இதைப் போன்ற சரித்திரங்கள் பல இருக்கின்றன. மைசூர், ஜம்மு, நேப்பாளம் முதலிய சமஸ்தானங்களிலும் திருவனந்தபுரத்திலும் நடந்து வருகிற பிராமண மாய்கைகளுக்கு அவர்கள் சமய நூற்கள்தான் காரணம். பிராமண மாய்கையின் பயனாக மகம்மதியர்களாலும் கிறிஸ்தவர்களாலும் நடந்து வரும் சமத்

துவ இயக்கத்தால் இந்துக்களும் அவர்களின் ஆலயங்களும் அழிந்து போவதையும்பற்றி ஆச்சரியம் என்னே!

98. "பிராமணனால் சூத்திர ஸ்திரீயிடத்தில் பிள்ளை பிறந்தால் அவனுக்கு தந்தையின் சொத்துக்குப் பாத்தியமில்லை" (மனு அத். 9 சு. 155)

அன்பர்களே! இதிலிருந்து பிராமணனைத் தவிர மற்ற எனையோரையும் பிணத்திற்கு ஒப்பிடுகிறார்கள். திருவனந்தபுரத்தில் சில காலங்களுக்குமுன் ஜனநாயகத்துக்கு தகப்பன் சொத்து பிள்ளைக்குப் பாத்தியமில்லாதிருந்தது. ஏதோ தெய்வ கிருபையால் தற்சமயம் மாறிவிட்ட போதிலும் அங்குள்ள அரச குடும்பத்தில் மாறவில்லை; ஆதலால் அங்கு பிராமணீய சூழ்ச்சிகள் இன்னும் ஒய்ந்தபாடில்லை.

99. "பிராமணனுக்குச் சூத்திரன் மனைவியிடத்தில் பிறந்துள்ள புத்திரன் செய்யும் சிரார்த்தமானது பரலோக உபயோகமாகாததால் அத்தகைய பிள்ளை உயிரோடிருந்தாலும் பிணத்திற்கொப்பாவான். இவனைப் பாவச புத்திரனென்றும் சொல்லப்படும். இவன் தான் முன்பு கௌத்திரன் என்று சொல்லப்பட்டவன்."

(மனு அத். 9 சு. 178)

100. "பூணூல் முதலிய பிராமணச் சாதிக் குறியைத் தரிக்கிற சூத்திரன் அங்கங்களை அரசன் வெட்டிவிட வேண்டும்." (மனு அத். 9 சு. 224)

101. "சூதாடுகிறவன், கூத்தாடி, பாடகன், கெட்ட நடையுள்ளவன், வேதங்களையும் ஸ்மிருதிகளையும்

நிக்திப்பவன், விரதானுஷ்டானமில்லாதவன், ஆபத்தில் லாத போது தன் ஜாதித்தொழிலை விட்டு மற்றொரு ஜாதித்தொழிலைச் செய்பவன், குடியன் இவர்களையெல் லாம் அரசன் பட்டணத்தை விட்டுத் துறத்தவேண்டும்.''

(மனு அத். 9 சு. 225)

அன்பர்களே! பிராமணர்களின் கொடுங்கோல் சட் டத்தை ஆதரித்து வந்ததினாலன்றோ அரசர்கள் அழிந்து போனதோடு குடிகளும் வறுமையினாலும் மற்றும் துன்பப்படுவதும்—அன்றி பிற சமயத்தினரால் ஆளப்படுபவராய் கல்வியறிவற்றவர்களாய்த் தவிக் கும்படி நேரிட்டது. நம்மவர்கள் அயல் நாடுகளில் மிரு கங்களிலும் கேடான நிலைமையில் அடிமைகளாய் நடத் தப்படுவதும் உத்தம ஸ்திரீகள் பிற சமயத்தினராகிய சில கொடியவர்களால் கற்பழிக்கப்படுவதும் இக்காரணத்தி னாலேயே.

102. ''பிராமணன் பொருளை அபகரிக்க சூத்தி ரனைச் சித்திரவதை செய்து கொல்லுக; ஆனால் பிராம ணன் சூத்திரனுடைய பொருளைத் தன் இஷ்டப்படி கொள்ளையிடலாம்.''

(மனு அத். 9 சு. 248)

103. ''அரசன் தன் கட்டளைக்கு மாறாக நடப்ப வனையும் பொக்கிஷத்திலிருந்து பொருளை அபகரிக்கின் றவனையும் தனக்கும் எதிரிக்கும் பகையுண்டுபண்ணுகிற வனையும் பலவிதமான கொடிய தண்டனைகளுக்குட் படுத்தலாம்.'' (மனு அத். 9 சு. 275)

அன்பர்களே! இப்பொழுது ஆங்கிலேயர் ஆட்சிக்கு விரோதமாகப் பலர் பலவாறு பேசிக்கொண்டாலும் அவர்கள் கொடுந்தண்டனையை அடைகின்றார்களில்லை. ஆனால் இக்காலத்திலும் மனுநீதி சாஸ்திரம் என்னும் அதர்மச் சட்டம் அமுலில் இருந்தால் பஞ்சாப் படுகொலையைப்போன்ற பல படுகொலைகள் நம் நாட்டில் நடத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதையும் அதற்கு நாம் குறைகூற முடியாதென்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

104. "இரவில் பூட்டை உடைத்திருகின்றவர்களின் கைகளைத் துண்டித்துக் கூர்மையான கழுவின் மீது ஏற்ற வேண்டும்". (மனு அத். 9 சு. 276)

அன்பர்களே! இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனின், இம்முறைப்படித் திருடர்களை மட்டுமன்றி பிராமணர்கள் திருடர்களுக்கு ஒப்பாக பிராமணரல்லாத மக்களில் எத்தகையோரைச் சொன்னாலும் அவர்களையெல்லாம் அரசர்கள் கழுவேற்றியிருக்கிறார்கள். வால்மீகி ராமாயணம் என்னும் பிராமண நூலின்கண் இவ்வித வசனம் காணப்படுகிறது: "யதாஹி சோர ஸததாஹி புத்தஸ்ததா ஹதம் நாஸ்திகமத்ரவித்தி" (திருடன் எப்படியோ அப்படியே புத்த சமயத்தினனும் என்று அறிந்துகொள்) இவ்வசனத்தை ஆதாரமாகவைத்துக்கொண்டே ஞானசம்பந்தர் புத்த பிட்சுக்களை கழுவேற்றும்படிச் செய்வித்தார். இக்காலத்திலும் மதுரையில் சமணர்களாகிய புத்த பிட்சுக்களைக் கழுவேற்றிய தினமென்று வைத்துக்கொண்டு ஆறாவது திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இதைப்போலவே ஒவ்வொரு

சிவாலயங்களிலும் நடைபெறுகிறது. குற்றமற்ற புத்த பிட்சுக்களையும் துறவிகளையும் கொலை புரிந்திருக்கிறார்கள். அவ்வுத்தமர்களின் உடலினின்றும் இரத்தம் சிந்தியகாலம் முதல் இந்நாட்டைவிட்டுச் சீதேவி போய் விட்டாள். உயிர்வதை செய்யா உத்தமரைத் துன்புறுத்திக் கொலைசெய்த கொடிய இந்நாட்டை "வெகு தூரத்தினின்றும் வந்தவர்களும் உயிர்க்கொலையே குலத் தொழிலாகக் கொண்டவருமான பிற சமயத்தினர்" வசப் படுத்தி உயர்குலப் பெண்களைக் கற்பழித்தார்கள். பிராமணன் முதல் பறையன் வரையிலுள்ள மக்கள் அனைவரையும் தங்கள் அடியினைப் பணியச்செய்தார்கள். இதனால் தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான் என்னும் பழமொழியை யனுசரித்து நம்நாட்டினர் செய்த பாவமே நம்மவர்களை இக்கதிக்கு ஆளாக்கினதென்றுணர்ந்து இத்துன்பத்தினின்றும் மோட்சமடைய வழி தேடிக்கொள்வீர்களாக.

105. "யாதொரு பிராமணனின் சாபத்தினால் அக்கினி எல்லாப் பொருளையும் தகிக்கின்றவனாயும், சமுத்திரம் உவர்நீராகவும், சந்திரனானவன் சில நாட்கள் தேய்வையும் சில நாட்கள் வளர்ச்சியையும் அடைகின்றவனாயும் இருக்கின்றதோ அத்தகையப் பிராமணனைப் பகைத்துக்கொள்ளுகிற எவன்தான் அழியாதிருப்பான்."

(மனு அத். 9 சு. 314)

106. "பிராமணர்கள் கோபித்தால் சுவர்க்கலோகத்தையும் வேறாக சிருஷ்டித்துவிடுவார்கள். திக்குப் பாலர்களையும் தேவர்களையும் மனிதர்களாக்கி விடுவார்கள். ஆதலால் பிராமணர்களைப் பகைக்கின்ற எவனும் க்ஷேமத்தை யடையமாட்டான்". (மனு அத். 9 சு. 315)

அன்பர்களே! ஒவ்வொரு சமயத்திலும் சுவர்க்க நரகங்கள் உண்டு; ஆனால் வேற்றுமைப்பட்ட லக்ஷணங்களையுடையனவாயிருக்கின்றன. புத்த சமயத்தினர்கள் ஜைனர்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், முதலிய சமயத்தினர் பிராமணர்களை வணங்காவிடினும் க்ஷேமமாகவே இருக்கிறார்கள். இந்து சமயமென்னும் வருணாசிரம தர்மத்தின் கர்த்தர்களாகிய பிராமணர்களும் அவர்களை வழிபடுவோர்களும் பிற சமயத்தினர்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். இத்தகைய துன்பக் குழியிலிருந்து நம்மவர்கள் கரையேற வேண்டுமானால், பிராமணன் உயர்குலத்தோன் என்கிற எண்ணத்தையும் அவனால் எழுதப்பட்ட (வேதம் ஸ்மிருதி) பொய்ச் சுவடிகளை நம்புவதையும் விட்டொழிக்கவேண்டும்.

107. "வைதீகமாயினும் லௌகீகமாயினும் அக்கினியானது எப்படி மேலான தெய்வமாகிறதோ அப்படியே பிராமணன் ஞானியாயினும் மூடனாயினும் அவனே மேலான தெய்வம்." (மனு அத். 9 சு. 317)

108. "ஒளிபொருந்திய அக்கினியானது மயானத்தில் பிணத்தை தஹித்தாலும் நிந்தனையில்லாமல் யாகத்தில் ஓமத்தினால் வளர்க்கப்படுகின்றதோ அப்படியே பிராமணர்கள் கெட்ட காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும் எல்லாவகையான நற்காரியங்களும் பூஜிக்கத்தக்கவர்களாவர்; ஏனெனில் அவர்கள் மேலானவர்களன்றோ?" (மனு அத். 9 சு. 318)

109. "பிராமணனுக்குத் துன்பம் செய்கின்ற க்ஷத்திரியனை சாபத்தினாலாவது மரண ஓமம் (சூன்யம்)

செய்தாவது ஒடுக்கவேண்டியது; ஏனெனில் க்ஷத்திரியன் பிராமணனிடத்திலிருந்து உண்டானவனல்லவா?"

(மனு அத். 9 சு 319)

110. "தண்ணீரிலிருந்து அக்கினியும், பிராமணனிடமிருந்து க்ஷத்திரியனும், கல்லிலிருந்து ஹோமமும் உண்டாயிற்று. எங்கும் வியாபித்திருக்கிற அவைகளின் சக்திகள் தத்தம் பிறவித் தானங்களில் அடங்கிப்போகின்றன."

(மனு அத். 9 சு. 320)

அன்பர்களே! முன்னொரு காலத்தில் க்ஷத்திரிய ஜாதி அழிந்து போனபோது அந்தக் குலத்துப் பெண்களைப் பிராமணர்கள் புணர்ந்து அக்குலத்தை மீண்டும் உயிர்ப்பித்தார்கள்; க்ஷத்திரியர்கள் பிராமண பீஜத்தினின்றும் உண்டானார்கள் என்ற கதையைப்போலவே பண்டைக்காலத் தமிழ் நூற்களிலும் புத்த நூற்களிலும் பிராமணர்கள் க்ஷத்திரியர்களின் வைப்பாட்டிப் பிள்ளைகள் என்று கூறப்பட்டிருக்கிறது.

111. "பிரமன் பசுக்களை சிருஷ்டித்து அதைக் காக்கும் பொருட்டு வைசியனிடத்திலும், பிரஜைகளை சிருஷ்டித்து உலக முன்னேற்றத் துறையில் அவர்களை உயர்த்திக்கொண்டு வர க்ஷத்திரியனிடத்திலும் ஆத்மலாபத்திற்குரிய துறையில் உயர்த்திக்கொண்டுவர பிராமணனிடத்திலும் அப்பிரஜைகளை ஒப்புவித்தார்."

(மனு அத். 9 சு. 327)

112. "வைசியன் பசுக்களைக் காப்பாற்றாமல் இருக்கலாகாது. அவனிருக்க மற்றொரு ஜாதியான் காப்பாற்றவுங்கூடாது." (மனு. அத். 9 சு. 328)

அன்பர்களே! நேபாள முதலிய நாடுகளில் க்ஷத்திரிய ஆட்சியே நடைபெறுகிறது. அவைகளில் சூத்திரன் இன்றைக்கும் பசுவைக்காப்பாற்றவும் பால் குடிக்கவும் கூடாது.

113. "சூத்திரனுக்கு இம்மையிலும் மறுமையிலும் பிராமண பணிவிடை ஒன்றே பயன் தருவதாம்."
(மனு அத். 9 சு. 334)

114. "சூத்திரன் மனோவாக்கு காயங்களினால் பிராமணனுக்குத் தொண்டு செய்க. பிராமணனில்லாதவிடத்து க்ஷத்திரியனுக்கும், க்ஷத்திரியனில்லாதவிடத்து வைசியனுக்கும் பணி செய்க". (மனு அத். 9 சு. 335)

115. "வீராத்தியப் பிராமணனுக்கு அவ்வித ஸ்திரீயிடத்தில் பாவியான பூர்ஜ கண்டன் பிறக்கிறான். அவனுக்கு ஆவந்தியன், வாடதானன், புஷ்பதன், சைகன் என அந்தந்த தேசங்களில் வெவ்வேறு பெயர் உண்டு.
(மனு அத். 10 சு. 21)

116 "வீராத்திய க்ஷத்திரியனுக்கு அவ்வித ஸ்திரீயிடத்தில் சல்லன் பிறக்கிறான். அவனுக்கு மல்லன், நீர்சுவிகடன், கசன், திராவிடன் என அந்தந்த தேசங்களில்வெவ்வேறு பெயர் உண்டு". (மனு அத். 10 சு. 22)

அன்பர்களே! பிராமணனின் மத நூற்படிக்கு திராவிடன் என்றால் பாவி பரம்பரையிற் பிறந்தவன் என்று பொருள். இப்படி நம்மை அவமதிக்கிற நூலைச் சமய நூலெனக் கொள்ளுதல் முறையா?

117. "சூத்திரன் பிராமணப் பெண்ணைச் சேர்ந்தால் அவளினின்றும் பிறக்கிறபிள்ளை சண்டாளனாவான்; அச்சண்டாளனும் மற்ற நான்கு வருணப் பெண்களையும் கூடினால் அவனைக்காட்டிலும் தாழ்ந்த ஜாதி மக்கள் உண்டாவார்கள்". (மனு அத். 10 சு. 30)

அன்பர்களே! இதனால் இக்காலத்தில் பிராமணர்களால் அழைக்கப்படும் முறைப்படி பறையர்கள் பிராமணனுக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவர்கள். இவை தங்கள் மதநூலில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இவர்கள் கூற்றை என்னவென்றுரைப்பது?

118. "பிராமணர்களை வழிபடாததினாலும் உபநயன முதலிய சடங்குகளைச் செய்துகொள்ளாததினாலும் க்ஷத்திரிய ஜாதிகள் வரவரச் சூத்திரத்தன்மையையடைந்தார்கள்". (மனு அத். 10 சு. 43)

119. "பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போஜம், யவனம், சகம், பாரதம், பால்ஹீகம், சீனம், கிராதம், தரதம், கசம் இந்த தேசங்களையாண்டவர்கள் அனைவரும் மேற்சொன்னபடி சூத்திராய்விட்டார்கள்". (மனு அத். 10 சு. 44)

அன்பர்களே! சூத்திரன் பிரம்மாவின் காலில்பிறந்ததால் சூத்திரனானான் என்று சொன்னவர்கள் இதில் பிராமணனுக்குப் பணிவிடை செய்யாமலும் அவன் சொற்படி நடக்காமலும் அன்பே உருவாகக்கொண்டு ஆட்சி புரிந்துவந்த அரசர்களை சூத்திரன் என்று கூறி

யிருக்கிறார்கள். இவ்விதப் புரட்டர்களை நம்மவர்கள் இன்னும் நம்பிக்கொண்டிருந்தால் நமது கதி என்னவாகு மென்பதை யூகித்து அறிய வேண்டியது. இவைகளை எல்லாம் மனுஸ்மிருதி அத்தியாயம் 10ல் சுலோகம் 45-முதல் 73வரை இம்மாதிரியே கூறியிருக்கிறது.

120. "பிராமணன் விவாகம் செய்துகொண்ட சூத்திரப் பெண் வயிற்றில் பிறந்த பெண் பிராமணனையே விவாகம் செய்துகொண்டு அவளுக்குப் பெண் பிறந்து அவளும் பிராமணனையே விவாகம் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் ஏழு தலைமுறை வரை நடந்து வந்தால் ஏழாந் தலைமுறையிற் பிறந்தவர்கள் பிராமண ராவார்கள்." (மனு அத். 10 சு, 64)

121. "மேற்சொன்னபடி பெண் சந்ததி வழியில் மட்டும் பிறந்த சந்ததி ஏழாந்தலைமுறையில் பிராமணத் தன்மையே யடையும். இவ்விதமே க்ஷத்திரியனுக்குப் பிறந்த பெண் சந்ததி ஐந்து தலைமுறை வரையில் க்ஷத்திரியனையே விவாகம் செய்து வந்தால் க்ஷத்திரியத்தன் மையையும், வைசியனை விவாகம் செய்து வந்தால் மூன்றாம் தலைமுறையில் வைசியத்தன்மையையும் அடையும்." (மனு அத். 10 சு. 65)

அன்பர்களே! மலையாளத்தில் பெரிய அரச குடும்பத்தில் உள்ள பெண்கள் பரம்பரையாகவே ஏழு தலைமுறையுமல்ல எழுபது தலைமுறையுமல்ல அதற்கு மேற்பட்ட தலைமுறையாக பிராமணர்களையே விவாகம் செய்து வந்து இதுவரையில் பிராமணர்கள் தங்கள் பிராமணச் சாதியோடு சேர்க்கப்படவில்லை. இதன் கார

ணம் வேதங்களையும் ஸ்மிருதிகளையும் அத்தகைய குடும்பத்தினர் படிக்காத காரணமேயாகும். இங்கு எட்டில் அப்படி எழுதுவதும் பயிற்சியில் தடுப்பதுமாயிருக்கிறது.

122 "சூத்திரன் பிராமணனுடைய தொழிலைச் செய்தாலும் பிராமணனாகமாட்டான். ஏனெனில் அவனுக்குப் பிராமணத் தொழிலில் அதிகாரமில்லையன்றோ! பிராமணன் சூத்திரத் தொழிலைச் செய்தாலும் அவன் ஜாதி உயர்த்ததன்றோ. இப்படியே பிரம்ம தேவன் நிச்சயஞ் செய்திருக்கிறார்." (மனு அத். 10. சு. 75)

அன்பர்களே! பிராமணரல்லாத நம்மவர்கள் முன்னேற்றமடைய எனக்குத் தெரிந்த வரையில் இரண்டு வழிகள் இருக்கின்றன. முதல் வழி இந்த பிராமண சமயத்தைப் புறக்கணித்து, சம உரிமையை (சாம்மிய வாதத்தை) ஒப்புக்கொண்டு அவைகளின் படி ஒழுகுதல் அல்லது பிராமணனை மதியாமல் ஆலயங்களில் புகுந்து சமத்துவம் பாராட்டியும் வேத பாடசாலைகளில் புகுந்தும் அவர்களுக்கொப்பாக வாசித்தும் முன்னுக்கு வரலாம். நமது பிள்ளைகளுக்கு வேத சாஸ்திரங்களைக் கற்பிக்க ஒப்புக்கொள்ளாத பிராமண சாஸ்திரங்களை சண்டாளரைப் போல் சமூகத்தினின்றும் ஒதுக்குதல் வேண்டும். புண்ணிய பூமியாகிய நம் நாட்டில் பிராமணரல்லாத மக்களுக்குள் பற்பல வேற்றுமைகளை யுண்டாக்கி இம்மைக்கும் மறுமைக்கும் உதவாமல் செய்த கொடிய பாதகர்களை புறக்கணிப்பது புண்ணியமேயாம்.

123. "பிராமணரல்லாதான் பொருளாசையால் உயர்குலத்தோனுடைய தொழிலைச் செய்தால் அரசன்

அவன் பொருள் முழுமையும் பறித்துக்கொண்டு அவனைத் துரத்திவிடவேண்டும். (மனு அத். 10 சு. 96)

அன்பர்களே! இத்தகைய குற்றத்திற்குத் தண்டனையடைந்த பலருடைய சரித்திரம் ராமாயண முதலிய புராணங்களில் நிரம்பவும் காணலாம்.

124. "தனமில்லாமல் வருந்துகிற பிராமணன் தகாதவனுக்கு ஓதிவைத்தால் அவனிடம் தானம் வாங்குதல் யாகம் செய்வித்தல் முதலிய காரியங்களை செய்யலாம் தோஷமில்லை. ஏனெனில் பிராமணன் நீர், நெருப்பு இவைகளைப் போல இயற்கையிலேயே பரிசுத்தனல்லவா?" (மனு அத். 10 சு. 103)

அன்பர்களே! பிராமணர்கள் தண்ணீரைப்போல் எண்ணியதால் உலகத்தைப் பிரளையம் செய்தும் நெருப்பாக எண்ணியதால் எரித்தும் வந்தார்கள் போலும்.

125. "பிராமணன் ஆபத்து காலத்தில் பிரதிலோம (சண்டாளன்) ஜாதியினுடைய அன்னத்தைச் சாப்பிட்ட போதிலும் ஆகாயத்தில் எறிந்த சேற்றைப்போல அவனிடத்தில் பாவம் ஒட்டாது". (மனு அத். 10 சு. 104)

அன்பர்களே! தற்காலத்தில் காங்கரஸ் பெயர் வைத்துக்கொண்டும் வேறு சில காரணங்களைக்கொண்டும் சில பிராமணர்கள் அனைவரோடும் கலந்து சாப்பிடுகின்றனர். அப்படிப்பட்டவர்களை பிராமணரல்லாதாருக்கு இன்னல் விளைவிக்க வந்த ஒற்றர்கள் என்று அறிந்துகொள்ளுங்கள்.

126. "அஜீகர்த்தர் என்னும் ரிஷி பசியினால் வருத்தப்பட்டு சுனச்சேபன் என்னும் தன் பிள்ளையை நரமேத யாகத்துக்குக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நூறு பசுக்கள் வாங்கி கொன்று யாகம் செய்து தனது பசியைத் தீர்த்துக்கொண்டார். அப்படிச் செய்தும் அவருக்குப் பாவம் நேரிடவில்லை."

(மனு அத். 10 சு. 105)

அன்பர்களே! பணத்திற்காகத் தன் பிள்ளையை யாகத்திற் கொலைசெய்யும் பொருட்டு துணிவது பிராமணனின் போதனா சக்தி என்றால் அத்தகைய பிராமண ஜாதி வேறு எத்தகைய கொடுந்தொழிலைத்தான் செய்ய முற்படாது. அங்ஙனம் கொடுமை செய்தாலும் ரிஷிப் பட்டம் அவர்களைவிட்டு நீங்காதென்பது ஆச்சரியமே.

127. "சூத்திரன் இம்மையில் உயிர் வாழ்க்கைக்கும் மறுமைப் பயனுக்காகவும் பிராமணனையே தொழவேண்டும். அதுவே அவனுக்குப் பாக்கியம்."

(மனு அத். 10 சு. 122)

அன்பர்களே! இத்தகைய நிலைமையில் நம்மவர்களுக்கு சமத்துவமும் உரிமையும் கொடுப்பவர்களை வணங்குவதே பாக்கியம்.

## சூத்திரனுக்கு ஜீவனோபாயம்

128. "பிராமணன் உண்டு மிகுந்த உணவு (எச்சில்), உடுத்திக் கிழிந்த ஆடை, சாரமற்ற தானியங்கள் (பதர்), இவைகளைப் பிராமணன் சூத்திரனுக்கு ஜீவனத்திற்காகக் கொடுக்கவேண்டும்." (மனு அத். 10 சு. 125)

129. "சூத்திரன் எவ்வளவு திறமையுள்ளவனாயி ருந்தாலும் பொருளைச் சேர்க்கலாகாது. சூத்திரனிடம் பொருள் சேர்ந்தால் பிராமணனுக்குத் துன்பம் வரும்."
(மனு அத். 10 சு. 129)

130. "அதிக பசு முதலியவற்றால் செல்வமுடைய வனாயும் சோமபானம் பண்ணாதவனாயும் இருக்கிற வைசியன் வீட்டிலிருந்து கேட்டுக்கொடாவிடில் வலிமை செய்தாவது களவு செய்தாவது யாகத்திற்கு வேண்டிய பொருளை பிராமணன் எடுத்துக்கொள்ளலாம்."
(மனு அத். 11 சு. 12)

131. "அவ்வித வைசியனில்லாவிடில் யாகத்திற்கு இரண்டு மூன்று அல்லது அதிக அங்கங்கள் குறைந்தா லும் செல்வமுள்ள சூத்திரன் வீட்டிலிருந்து யதேஷ்ட மாக யோசனையின்றிக் கேளாமலும் வலிமையினாற் கொள்ளையிடலாம்; ஏனென்றால் அவனுக்கு ஒரு யாகத் திலும் சம்பந்தமில்லையல்லவா". (மனு அத். 11 சு. 13)

அன்பர்களே! பிராமணரல்லாதார் சிறிது பொன் சேர்த்து வைத்தாலும் பிராமணர்கள் கொள்ளையிடலாம். ஆங்கிலேயர் ஆட்சி செய்துவரும் இன்னாளில் பிராம ணர்கள் பிராமணரல்லாதார் பொருளைக் கொள்ளை யடிக்க மனுநீதியை மறந்து விட்டார்கள் போலும். ஒரு வேளை அவ்வாறு செய்தால் கைதியாகி விடுவோமென்று பயந்தார்கள் போலும்!

132. "யாகம் செய்கிறவன் பொருள் தேவர்கள் பொ ருள் என்றும், யாகம்செய்யாதவர்களின் பொருள் அசுரர்

களின் பொருளென்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் அசுரப்பொருளை தேவர் பொருளாக்குதல் தருமமேயாம்.'' (மனு அத். 11 சு. 20)

133. ''தரும சிந்தனையுள்ள அரசன் இவ்விதம் திருடி யாகம் செய்கிற பிராமணனைத் தண்டிக்கக் கூடாது. அரசனின் அறியாமையால் பிராணன் பசித்துத் துன்பத்தை யடைகிறான்''.

(மனு அத். 11 சு. 21)

அன்பர்களே! பிராமணன் தன்னை தேவர் என்றும் மற்ற ஏனையோர்களை அசுரர்களென்றும் அசுரர் பொருளை பிராமணன் கொள்ளை கொண்டால் பாதகமில்லை என்றும் கூறுகிறார்கள். இவ்வித வசனங்களால் பிராமணன் கட்டளைக்குக் கீழ்ப்படியாத சூத்திரர்களை மகா பாதகம் செய்தாவது ஒடுக்க வேண்டுமென்பது அவர்கள் கருத்து.

134. ''சுவாதீனமுள்ள சக்தி பராதீனமான அரசன் சக்தி இவ்விரண்டில் தன் சக்தியே உயர்ந்தது ஆகையால் பிராமணன் தன் சக்தியைக் கொண்டே பகைவர்களை அடக்க வேண்டும். அவரவர்களின் சக்தியை முறையே காண்க.'' (மனு அத். 11 சு. 32)

135. ''அதர்வண வேதத்திற் சொல்லிய ஆங்கிரச முதலிய அபிசார (சூன்யம்) மந்திரங்களை யோசியாமற் பிரயோகிக்கலாம். அத்தகைய மந்திரமுள்ள வாக்கே பிராமணனுக்கு ஆயுதமாகையால் அதைக்கொண்டே

அவன் பகைவர்களை (சொற்படி நடவாத க்ஷத்திரியனை) அடக்க வேண்டும்.” (மனு அத். 11 சு. 33)

136. “க்ஷத்திரியன் தன் புஜபலத்தினால் தன் ஆபத்தைப் போக்கவேண்டும். பிராமணன் மேற்சொன்ன அபிசார மந்திரத்தினால் செய்யப்படுகிற ஜப ஹோமங்களாலும் தன் ஆபத்தைப் போக்கவேண்டும். வைசிய சூத்திரர்கள் தம் பொருளைக்கொடுத்து ஆபத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.” (மனு அத். 11 சு. 34)

அன்பர்களே! வேத மந்திரத்தில் நம்பிக்கையுள்ள பிராமணர்கள் தற்போது தங்களுக்கு சுயராஜியம் வேண்டுமென்று ஆங்கிலேயரைக் கெஞ்சுவானேன். அபிசார மந்திரம் செபித்து அவர்களின் எதிரியை வெல்லக் கூடாதா?

137. “சக்தியிருந்தும் அக்னிஹோத்திரம் செய்யாமை, பொன் நீங்கலாக மற்ற பொருளைத் திருடுதல், கடனைத் தீர்க்காமை, பிற சமய நூற்களை யோதுதல், கூத்தாடுதல், பாடுதல், தானியம் உலோகம் (பொன், பொருள்) பசு இவைகளைத் திருடுதல்.”

(மனு அத். 11 சு. 65)

138. “குடிக்கிற மனைவியைப் புணர்தல், பெண்களையும் பிராமணரல்லாதாரையும் கொல்லுதல், இவை எல்லாம் உபாதகம் (குறைந்த பாவம்) என்றறிக”.

(மனு அத். 11 சு. 66)

அன்பர்களே! மனுஸ்மிருதி அத்தியாயம் 11ல் சுலோகம் 56முதல் 63 வரையில் இதேமாதிரிதானிருக்கி

றது. இதில் பிராமணரல்லாதாரைக் கொல்வது ஒரு துரும்பைக்கிள்ளி எறிவது போலிருக்கிறது. இதனால் பிராமணர்கள் நம்மை எவ்வளவு இழிவான நிலையில் கருதி இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் கவனித்தற்பாலது. இதற்குக் கீழ்வரும் பிராயச்சித்தங்களையும் கவனியுங்கள்.

139. "பிராமணன் அறியாமையினால் சூத்திரனைக் கொன்றுவிட்டால் ஆறுமாதகாலம் விரதமிருக்கவும்; அல்லது ஒரு எருதையும் பத்து வெள்ளைப் பசுக்களையும் வேதம் தெரிந்த பிராமணனுக்குக் கொடுக்க".

(மனு அத். 11 சு. 130)

140. "அல்லது பூனை, அணில், கோட்டான், காடை, தவளை, நாய், உடும்பு, காக்கை இவைகளில் ஒன்றைக் கொன்றால் செய்யவேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதைச் சூத்திரனுக்கும் செய்க".

(மனு அத். 11 சு. 131)

141. "மேற்சொல்லியவைகளைத் தெரியாமற் கொன்றால் மூன்றுநாள் பால் சாப்பிட்டுக்கொண்டு உபவாசம் இருக்கவேண்டும். அதற்கு சக்தி இல்லாவிடில் மூன்றுநாள் நாள்தோறும் ஒரு யோசனை நடக்கவேண்டும். அதற்கும் முடியாவிட்டால் புண்ணிய தீர்த்தத்திலேனும் மூன்றுநாள் முழுக வேண்டும். அதற்கும் முடியாவிடில் வருண மந்திரத்தையாவது மூன்றுநாள் செபம் செய்யவேண்டும்". (மனு அத். 11 சு. 132)

அன்பர்களே! இவ்விதம் ஒரு தலைப்பட்சமாக சொல்லக்கூடிய பொய்ச்சுவடிகளை மத நூற்களென்று

ஒப்புக்கொள்ளவும் அதன்படி ஒழுகவும் அவைகளை எழுதியவர்களையும் அவர்கள் கால்வழி வந்தோரையும் வணங்கவும் நம்மவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதால் நம்மவர்களை அறிவிலிகளென்று நாகரீக உலகத்தார் தூற்ற மாட்டார்களா? பின்னும், மனுநீதி அத்தியாயம் 11-ல் சுலோகம் 162 முதல் 169 வரை நீங்கள் படித்தால் இன்னும் பிராமண அட்டூழியங்கள் பல உங்களுக்குப் புலப்படும்.

## சூத்திரனுக்குத் தவம்

142. "பிராமணனுக்கு வேத வேதாந்தங்களை ஓதி உணரும் ஞானமும் க்ஷத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி அரசியல்நடத்தும் ஞானமும் வைசியனுக்குப் பயிர்வர்த்தகம் இவைகளைக் குறித்த ஞானமும் சூத்திரனுக்குப் பிராமணப் பணிவிடையும் தவமாகும்''.

(மனு அத். 11 சு. 235)

அன்பர்களே! இத்தகைய அதர்ம ஆபாசக் களஞ்சியத்தை தரும நூலென்று கருதி வழிபடுகிற நம்மவர்கள் இதுவரையிலும் மோட்சத்திற்குப் பதிலாக மோசத்தையே அடைந்தார்கள் போலும்! இந்த பிராமண நூற்களைப் புறக்கணிக்கும் நன்னாள் என்னாளோ அந்த நாளில் தான் பிராமணர்களின் மமதை அடங்கும்; அதுவரையில் துன்பத்துக்கு ஆளாகியிருக்கிற நம்மவர்கள் நல்ல சுகத்தை யனுபவிக்க முடியாது.

143. "உலண்டுப் பூச்சி, பாம்பு, விட்டிற்பூச்சி, பசுக்கள், பறவைகள் முதலியனவும் தவத்தால் சொர்க்கத்தையடைகின்றன''. (மனு அத். 11 சு. 240)

அன்பர்களே! தவத்தினால் மோட்சமடையப் பிராமணனுக்கும், பிராமணனைப் போல் கொடுமையுள்ள பாம்பு முதலிய விஷ ஜெந்துக்களுக்கும் உரிமையே ஒழிய அவ்வுரிமை பிராமணரல்லாதானுக் கில்லையென்பதை ராமாயணம் உத்தர காண்டத்தில் ஒரு குற்றமும் இல்லாமலிருந்தும் சூத்திர குலத்தில் பிறந்தவன் என்ற காரணத்தால் மட்டும் இராமனால் கொல்லப்பட்ட "சம்பூகன்" என்னும் துறவியின் கதையைக் கவனிப்பீர்களாக.

144. "யானை, குதிரை, சூத்திரர், பழிக்கத்தக்க மிலேச்சர், சிம்மம், புலி, பன்றி இவ்விதமாகப் பிறப்பது தமோ குணத்தின் மத்திம கதி." (மனு அத். 12 சு. 43)

அன்பர்களே! இதில் பிராமணரல்லாதாரைஎதற்கு ஒப்பிட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

145. "கர்மப் பிராஷ்டனான க்ஷத்திரியன் மலம், பிணம் இவைகளைத் தின்னும் கடபூதம் என்னும் பேயாகப் பிறக்கிறான்." (மனு அத். 12 சு. 71)

அன்பர்களே! பிராமணன் இக்கலாலத்தில் செய்கிற தொழில்கள் பல இழிவாகப் பிறரால் கருதப்பட்டு வந்தபோதிலும், அவைகளுக்கெல்லாம் ஆபத்கால தர்மம் இடங்கொடுக்கிறது.

146. "கர்மப்பிரஷ்டனாகிய வைசியன், சுவர்நீரைச் சாப்பிடுகிற மைத் ராக்ஷஜ்யேதிகன் என்னும் பேயாகவும், வேத ஸ்மிருதிகளுக்கு விரோதமாக நடக்கும்

சூத்திரன் சீலைப் பேனைத்தின்னும் பேயாகவும் பிறக்கி றார்கள்." (மனு அத். 12 சு. 72)

அன்பர்களே! இதை வாசித்து விட்டு இதே மாதிரி அடக்கு முறைதான் எல்லா வேதங்களிலும், ஸ்மிருதி களிலும், இருபத்தெட்டு சிவாகமங்களிலும், இரு நூற் றேழு உபாகமங்களிலும், பதினான்கு சித்தாந்த சாஸ் திரங்கள், பன்னிரண்டு திரு முறைகள், பதினெட்டுப் புராணங்கள், பின்னும் வைணவ நூற்களிலும், இவை கள் பரவிக் கிடக்கின்றன என்பதையும் அறிந்து கொள் ளுங்கள்.

---

## 'குடி அரசு', 'பகுத்தறிவு' பதிப்ப வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| புராணங்கள் | 0 | 8 | 0 |
| வால்மீகிராமாயண சம்பாஷணை | 0 | 8 | 0 |
| கைவல்யசுவாமிகள் கட்டுரைகள் முதல் பாகம் | 0 | 8 | 0 |
| இரண்டாம் பாகம் | 0 | 5 | 0 |
| இராவணப்பெரியாரும், ராமாயணப் பாத்திரங்களும் | 0 | 8 | 0 |
| ஞானசூரியன் | 0 | 5 | 0 |
| சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| ஜாதியை ஒழிக்க வழி | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தர்மபரீட்சை) | 0 | 3 | 0 |
| மேயோகூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| பேய்-பூதம்-பிசாசு | 0 | 3 | 0 |
| மதம் மக்களுக்குச்செய்த நன்மை என்ன? | 0 | 3 | 0 |
| பிரகிருதிவாதம் (ஈ. வெ. ரா) | 0 | 4 | 0 |
| மதமும் விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | 3 | 0 |
| நரகம் எங்கே? | 0 | 2 | 0 |
| மநுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| இந்தி எதிர்ப்புப் பாடல் | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |

கிடைக்குமிடம்:-

குடி அரசு பதிப்பகம், இரோடு.

பெரியார்

# ஈ. வெ. ராமசாமி அவர்களால் எழுதப்பட்ட நூல்கள்

---

| | | |
|---|---|---|
| 1. | பெண் ஏன் அடிமையானாள்? | 0—4—0 |
| 2. | சோதிட ஆராய்ச்சி | 0—4—0 |
| 3. | லெனினும், மதமும் | 0–12—0 |
| 4. | பிரகிருதிவாதம் | 0—4—0 |
| 5. | பர்னாட்ஷா உபந்யாசம் | 0—1—0 |
| 6. | வால்மீகி ராமாயண சம்பாஷணை | 0—8—0 |
| 7. | இனிவரும் உலகம் | 0—2—0 |

## பெரியார் சொற்பொழிவுகள்.

| | |
|---|---|
| சீர்திருத்தம் | 0—2—0 |
| இலங்கை உபந்யாசம் | 0—2—0 |
| திருச்சி பொதுப் பிரசங்கம் | 0—2—0 |
| திராவிடநாடு திராவிடருக்கே | 0—2—0 |
| தமிழர்கள் | 0—0—6 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0—0—6 |
| கலையும் நாடகமும் | 0—0—6 |
| தமிழ் இசை, நடிப்புக் கலைகள் | 0—1—0 |

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.